உ

ஜோதிமயம்.

# இரஞ்சித போதினி

கதை, கர்வ்யம், சரித்திரம், நவீனம், புராணம், இதிகாசம், அனுபவ முதலிய விஷயங்களைப் புனைந்துகொண்டு வெளிவரும் ஓர் மாதந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு." (திருவள்ளுவர்.)

ஆசிரியர் :—தமிழ்ப்பூஷணம் ஸ்ரீ வாசுதேவ ராவ் கேய்க்வார்.

| தொகுதி 2 | இரக்தாக்ஷி௵ மார்கழி௴<br>1924௵ டிசம்பர்௴ | பகுதி 11 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்.

சருதரிய பலவுயிர்கள பந்தனைக் கார்க்கடற்
கரைபிவர வருகலனை யன்பருட் காட்சியை
யருமறையு மறிவரிய வஞ்சுகப் பேற்றினை
யரியசிவ னாரியபெய ரைந்தினைப் போற்றுதுங்
குரவுகமழ் குறவனிதை கொண்கனைக் கார்த்திகை
குடமுலையி னமுதகட லுண்டகத் தேக்கனைத்
தருணகும ரனையினிய தண்டலைச் சீர்ப்பொலி
சமரபுரி தனினிலவு கந்தனைக் காக்கவே.

தயார்ராகிவிட்டது! நூதன பதிப்பு. தயாராகிவிட்டது!!

ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

திரு அருட்பா.

- ரப்பு காகிதம் அழகான காலிக்கோ பைண்டு விலை ரூ. 5
- கிளேஸ் காகிதம் அழகான காலிகோ பைண்டு விலை ரூ. 7

☞ ஒவ்வொரு சிவபக்தர்களிடம் இப்புஸ்தகம் அவசியம் இருக்க வேண்டியது. கொஞ்சம் காபிகளே அச்சிடப்பட்டதால் ஒவ்வொருவரும் முந்திக்கொள்வது நலம்.

விலாசம் : இரஞ்சித போதினி ஆபீஸ்,
சௌகார்பேட்டை, சென்னை.

# இரஞ்சித போதினி

இரக்தாக்ஷிஸ்ரீ மார்கழிமீ 1924ஸ்ரீ டிசம்பர்மீ

## ஸ்வயராஜ்யத்தின் சூக்ஷமம்

### V

### (ஊ) பெண்கல்வி.

ஸ்வதந்தரம் என்பது ஸ்திரீகளினிடையேதானிருக்கிறது. நாம் ஸ்வதந்தரம் விரும்புவதுபோல அவர்களும் ஸ்வதந்தரத்தை விரும்புகிறார்கள். ஆனால் அவர்களுக்கும் நமக்கும் வித்தியாசமுண்டு என்றாலும், அவ்வித்தியாசம் சரியானதேயாகும். நமக்கு ஸ்வதந்தரம் தற்கால ஆட்சியின்கீழ் சட்டம் பொதுவாக ஜாதிவித்தியாசம், ஏழை, பிரபு என்ற வித்தியாசம் இல்லாதிருத்தல்வேண்டுமென்பதுபோலவே ஸ்திரீகளுக்கும், கல்வி விஷயத்தில் அவர்களையொத்த மங்கையர்களிடத்திலும் உறவாட ஸ்வதந்தரம் அளிக்கவேண்டும். நிற்க, நம் நாட்டு ஸ்திரீகளுக்கு நமது நாட்டுக் கல்வியைப் பூரணமாய் நாம் போதிக்காதவரையில் நாம் வேண்டுவதான ஸ்வதந்தரம் நமக்குக் கிட்டுமென்பது குதிரைக்கொம்பேயாகும். நமது நாடு வீரஞ்செறிந்த நாடாகவும், தருமம் தழைத்த நாடாகவும், காருண்யமிகுந்த தேசமாகவும், ஈவிரக்கமுடைய தேசமாகவும் விளங்கவேண்டுமானால் நம் நாட்டுப்பெண்களுக்கு கண்ணகி, மணிமேகலை, தேசிங்குராஜன் சரித்திரம், சாவித்திரி, அனுசூயாதேவிசரித்திரம், சுலோசனைசரிதம் இன்னும் பூர்வகாலத்து இராஜஸ்திரீகளின் சரித்திரங்களையும் போதித்துவரவேண்டும். இதோடு திருக்குறளையும், அதன் ஆசிரியரின் சரிதத்தையும் அவருடைய மனைவியின் குணவிசேஷங்களையும் போதிக்கவேண்டும், ஸ்திரீகளுக்குக் கல்வியறிவு இருக்குமாயின், நமது நாட்டில் கல்வி தாண்டவமாடுவதோடு செல்வமும் தாண்டவமாடும். கல்வி குறைந்ததோ செல்வமும் குறைந்ததென்றே கொள்ளவேண்டும். நம் நாட்டில் ஒரு சிலர்மட்டும் கல்வியில் தேர்ச்சிபெற்றுள்ளார் என்பது திண்ணம். அதுவும் இக்காலத்திய பயனற்றகல்வியேயாகும். கல்வி பயனுடையதாகவே யிருத்தல்வேண்டும். கல்வியானது ஸ்திரீகளினிடையே சஞ்சரிக்கும் காலம் வந்துவிடுமாயின், விபசாரத்துவமே விலகிப்போகும். பொறாமை போய்விடும். தருமம் தழைத்துவிடும். வீரம் செறிந்துவிடும். விவஸ்தை ஏற்பட்டுவிடும். பொய்மக்கிவிடும். உண்மை உயர்வையடையும். பதிவிருதாதர்மம் பலித்துவிடும். காலமழை கணக்காய்ப் பொழியும். கருணைத்தேன் பிலிற்றும், கள்ளத்தனம் கபடம் கட்டோடழிந்துபோகும். ஸ்திரீகளினாலேயே நம் நாட்டுச் சிறுவர்களும் சீரடைவார்கள். இதற்காக வேண்டிய பிரயத்தனமான பெண்கல்வியை யபிவிருத்திசெய்யும் தொழிலை மேற்

கொண்டு ஒவ்வொருவரும் உழைப்பது நலமென்றே நாம் துணிந்து கூறுதும்.

ஆனால் ஒரு சிலர் பெண்களுக்குக் கல்வி யெதற்கு? என்றும் அவர்கள் கற்று உத்தியோகம் செய்யவா போகிறார்கள் என்றும் கூறுவார்கள். அது மூடத்தனமானமொழி. அப்படிக் கூறுபவர்கள் அடிமைகளாயிருக்கும் நோக்கத்துடனே காலம் கழிப்பவர்களாவார்கள். அத்தகைய புத்தியிருக்கும்வரை நமக்கு ஸ்வதந்தரம் கிட்டு மென்பது 'முடவன் கொம்புத் தேனுக்குக் கொட்டாவி விட்டது' போலுமாகும். ஸ்திரீகளுக்குக் கல்வியபிவிருத்தி யெய்துவதனால் ஏற்படும் நன்மைகளாவன :—

(க்) தனது குடும்ப காரியங்களை ஒழுங்குபெற நடத்தவும் சிக்கனமாயிருக்கவும் ;

(வ்) தனது உற்றார் பெற்றார் உறவின்முறையார் தன் மணாளனது உற்றார் பெற்றார் உறவின்முறையார்களிடம் மரியாதையாய் நடந்துகொள்ளவும் ;

(ச்) தன் வீடுதேடிவரும் நண்பர்களையும் பந்துக்களையும் உபசரிக்கவும் ;

(ஞ்) அதிதிகளையும் யாசகர்களையும் தூஷிக்காமலும் புறக்கணிக்காமலும், கடுக்காமலிருக்கும் வழியும் ;

(ட்) மாமியார் மாமனாரிவர்களிடமும் நாத்திமார்களிடமும் மரியாதையுடனும் பணிவுடனும் நடந்துகொள்ளவும் ;

(ண்) ஸ்நேகிதிகளிடமும், ஏழை எளியவர்களிடமும், பிணியாளர்களிடமும் பக்ஷமாக நடந்துகொள்ளவும் ;

(த்) குடித்தனப்பாங்கு குறைவற நீடித்தமுறையில் என்றும் ஒரே மாதிரியா யிருக்கும் வண்ணம் நடத்தவும் ;

(ந்) குழந்தைகளை நன்னடக்கையுட னிருக்கவும், காலதேச வர்த்தமானத்தை யனுசரித்து அவைகளைப் போஷிக்கவும் ;

(ப்) கருணாகரனாகிய கடவுள் ஒருவர் உண்டென்பதையும், தரித்திரகாலத்தில் தன்விதியிதுவாகுமென்னும் உண்மையையறிந்து நடக்கவும் ;

ஆக மேற்கூறிய விஷயங்களுக் கெல்லாம் கல்வியே சிறந்த ஆபரணமாவதினால் நம்நாட்டு ஸ்திரீகளுக்கு நமது நாட்டுக் கல்வியையும், நம் நாட்டுக் கற்புக்கரசிகளின் சரித்திரத்தையும், வீரமங்கையர்களின் சரித்திரங்களையும் போதிக்க முற்படவேண்டும். இது செய்ய முற்பட்டால் ஸ்வராஜ்யம் உடனே சித்திக்குமென்பது திண்ணம்.

பத்திரிகாசிரியர்.

# இராமச்சந்திரன் காடேகிச் செல்வதைப்பற்றி ஆக்ஷேபனை சமாதானங்கள்

அல்லது

# பகவத் கீதோபதேசம்.

(369-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆகையால், இப்பொழுது இராஜ்யாபிஷேகார்த்தம் கொண்டு வரப்பட்டிருக்கிற கங்கையாதி தீர்த்தங்களை நான் வனவாஸஞ் செய்வதாய்த் தீர்மானித்திருக்கும் விரதாரம்ப ஸ்நானத்துக்கு உபயோகப் படுத்துவாயாக. (தனக்குள் ஆழ்ந்து யோசித்து மீண்டும் லக்ஷ்மணனை நோக்கி) "அப்பா, லக்ஷ்மணா! இராஜ த்ரவ்யமாயிருக்கும் இந்த அபிஷேக சாமான்கள் எனக்கு வேண்டியதில்லை. கைகேயி தேவியாரும் எவ்வித சந்தேகமுங் கொள்ளவேண்டாம். வேறே தீர்த்தங்கொணர்ந்து வனவாஸ விரதாரம்ப ஸ்நானத்திற்கு உபயோகப் படுத்திக்கொள்ளலாம்" என்றனர்.

இவ்வளவு சொல்லியும் லக்ஷ்மணசுவாமியின் பரிதாபம் நீங்காமலிருப்பதைக்கண்ட சுவாமியானவர் மீண்டும் அவனைநோக்கி, தம்பி! இராஜ்யலக்ஷ்மி விலகுகின்றதே என்று நினையாதே. இராஜ்யமாளுவதில் பற்பல கவலைகளும் இடையூறுகளுமுண்டு. வனவாஸஞ் செய்வதில் நல்ல நல்ல தர்ம காரியங்களை நிச்சிந்தையாய்ச் செய்யலாம். ஆகையால் வனவாஸமே சிலாக்கியம். இன்னுங்கேள். இதே அபிஷேகம் விக்னமானதில் கைகேயி பேரில் யாதொரு குற்றமுமில்லை. அவருடைய ஸ்வயமுமில்லை தைவ பிரரேபணையே தவிர வேறில்லையாகலின், மாற்றாந் தாயென்னுங் கொள்கையிலோ, மற்றெவ்விதத்திலோ, கைகேயி தேவியாரிடமுள்ள வருத்தத்தை இந்நொடியிற்றானே விடுத்து வனஞ்செலவேண்டிய முயற்சி செய்வாயாக" என்று நானாவிதமாய் ஹிதோபதேசஞ் செய்தருளினர்.

இவ்வாறு பகவான் மேற்கூறியவாறு பற்பலவிதமாய் தாமவழிக்கியன்ற ஹிதோபதேசஞ் செய்துவருங்கால், இளையவராம் லக்ஷ்மணர் தன் தலையைக்குனிந்தவராய், அண்ணாவின் தத்வோபதேசத்தைக்கேட்டு, தனக்குள், "இவ்வளவு சங்கடத்திலும் அண்ணா தைரியத்தை விடுத்தனரிலர். தர்ம மார்க்கத்தினின்று நழுவாவண்ணம் இருக்கின்றனர். இவருடைய மன உறுதியை என்னவென்றியம்புதல்!" என்று சந்தோஷமும் கோரமான அடவிக்கேகவேண்டியிருத்தலை நினைத்து துக்கமுங்கொண்டு மிகுந்த கோபத்துடன் புருவம்நெறித்து புற்றிலிருக்கும் சர்ப்பத்தைப்போல் சீறி பெருமூச்சு விட்டுக்கொண்டும் உதடு துடித்துக்கொண்டு மிருக்கையில் அவரு

டைய முகமானது ஆண் சிங்கத்தைப்போன்றிருக்கக்கண்ட ரகுநந்தனன், "அப்பா லக்ஷ்மணா! கோபம் வேண்டாம்" என்று தம்பியின் கையைப் பிடித்தமர்த்த, "இருங்கள் அண்ணா!" என்று கையை உதறிக்கொண்டு, கோணலாய்ப் பார்த்தவண்ணம், லக்ஷ்மணன், "ராமச்சந்திரண்ணா! தர்மத்திற்கு லோபம் வரும் என்ற பயத்தினால் வனம் போவதில் பரபரப்பு அடைகின்றீர்கள்; அது யுக்தமில்லை. 'தெய்வம்', 'தெய்வம்' என்று தெய்வத்தைக் குறுக்கிடுகின்றீர்களே! அதனிடத்தில் என்ன பராக்கிரமமிருக்கின்றது. மகா பராக்கிரமசாலியான தாங்கள் கேவலம் கையிலாகாத மனிதனைப்போல பேசலாமா? என் மனதிற்கொன்றும் பிடிக்கவேயில்லை. நம்மை வஞ்சனை செய்வதற்கிருக்கும் கைகேயி, ராஜா முதலானவர்களிடம் விசுவாசம் வைத்துக்கொண்டு இந்தப்படிக்கெல்லாம் ஆடலாமா? தர்மம் தர்மமென்று வெளிக்குமட்டில் வேஷம் போட்டுக்கொண்டு உள்ளுக்குள்ளே வஞ்சனையே குடிகொண்டிருக்கும் நெஞ்சம்படைத்துள்ள எந்தையர்களை உங்களைப்போல் சுத்தாந்தக்கரணம் படைத்திருப்பவர்களாய்க் கருதுதல் நீதியாமோ? தான் ராஜ்யமாளவேண்டுமென்ற கபட எண்ணமே கைகேயிக்கு; உலகமெப்புதலுக்கு தங்கட்குப் பட்டாபிஷேகமென்று வேண்டிய சம்பாரங்களைக் கோடிகரித்துப் பிறகு வரம் என்று சாக்கிட்டு ஏற்பட்ட வேஷமன்றோ! வரப்ரதான பிரயோஜன காலமெப்போ? சம்பராஸுர யுத்தகாலமெப்போ? வரப்ரதானம் நிஜமேயானால், வரப்ரதான காலத்திற்றானே அதற்கு பிரயோஜனமும் ஏற்பட்டிருக்க வேண்டும்! வரப்ரதானமே பொய். ஆகையால் மகாபாபிஷ்டர்களான எந்தையர்களிடம் தங்களாலேயே எனக்குக் கோபம் பொங்கி எழுகின்றது. அந்த என் கோபத்திற்கு வினியோகம் எவ்வாறென்ற ஆலோசனை செய்துகொண்டிருக்கின்றேன்.

குலபரம்பரை வழக்கவொழுக்கங்களை யனுசரித்து நம்முடைய ரகு வம்சத்தில் ஜ்யேஷ்டனுக்கு ராஜ்யப் பட்டாபிஷேகமா? அல்லது கனிஷ்டனுக்கோ! இந்த விஷயம் எடுத்தால் எனக்குக் கோபம்தான் மிகையாகின்றது தாங்கள் என்னை மீறிநடப்பவனாப் நினைத்துக் கோபங்கொள்ளாமல் என்னை மன்னித்து ரக்ஷிக்கும்படி வேண்டிக்கொள்ளலாயினேன்" என்று வணங்கி நின்றான்.

பின்னும் ராமசந்திரனைப்பார்த்து லக்ஷ்மணன், அண்ணா தங்கட்குத் தெரியர்த தர்மங்களும் நியாயங்களும் இல்லை; ஆயினும், பிதுர்வாக்கியமென்று தாங்கள் இப்பொழுது உபதேசிக்க வரும் தர்மம். கொஞ்சமேனும் எனக்குவே டியிருக்கவில்லை. கைகேயிவசத்தில் தசரதர் இருககிறார். கேவலம் ஸ்திரீ வியாமோகங்கொண்டிருக்கும் அந்தக் கிழவருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்வதும் நீதியாமோ? கைகேயியின் போதனையினால் கிழவர் வாய்க்கு வந்தபடி பிதற்றினால், அந்தப் பிதற்றலை (உளரல் குளறலை) தாங்களும் தர்மமென்று தடமோட்டங்கொண்டு பிடிவாதஞ் செய்கின்றீர்களே! அது

தகுமா? கைகேயியும் தசரதரும் நமக்குத் தாய் தகப்பன்மார்களா யேற்பட்டார்களேயல்லாமல், அவ்விருவரும் நமக்கு சத்துருக்களே யாவர். எந்தத் தகப்பனுகிலும் தன் ஆத்மஜனை (பிள்ளையை)ப் பார்த்து நீ காடுபோ வென்று சொல்வானு? காமியால் ஏற்படுத்தப்பட்ட விஷயத்தில் தாங்களும் ஈடுபடுதல் அழகல்ல. தைவமென்று கூறுகிறீர்கள், சூரனும் தைரியமுள்ளவனும் தைவத்தைச் சாக்கிட்டுப் பின்னடைதல் கூடுமா? சற்றே உத்தரவுகொடுங்கள்; தைவத்தின் பலத்தையும் என்னுடைய சௌரிய பலத்தையும் கண்டறிந்து விடலாம். கையிலாகாதவனுக்கன்றோ தைவம்வந்து கூத்தாடும். பராக்கிரமசாலியான என்முன் தைவத்தின் ஜபஞ் சாயாது, சாயாது! 'தைவம்' 'தைவம்' என்று என்னை வீணில் பயமுறப் பண்ணவேண்டாம். எனக்கு உத்தரவளிப்பீரேயானுல் தாங்கள்சொல்லும் தைவபலத்தையும், என்னுடைய பராக்கிரம பலத்தையும் இந்த நொடியிலே காட்டிவிடுகிறேன். எவரெவர் எனக்கெதிரிகளாய்ப் போர்தொடுக்க வருகின்ருர்களோ பார்க்கின்றேன். தகப்பனுரே வந்தாலும் சரி, என் பராக்கிரமத்தைக்காட்டி நிதானஞ் செய்கின்றேன். பரமாத்மாவும், பரமசாதுவுமான தங்களை வனஞ்செல்லும்படி நிச்சயித்தனுப்புகிறவர்களை, நான் என் பராக்கிரமத்தினுல் வனம்போக வடிக்கின்றேன் பாருங்கள். அண்ணு! பேராசைகொண்டிருக்கும் எந்தையர்களான கைகேயி தசரதரிவர்களின் ஆசையை நிராசையாய்ச்செய்து பரக்க வடிக்கின்றேன் பாருங்கள். என்னை எதிர்த்துப் போர் புரிகிறவர்கட்கு தைவம் தன் பலத்தைக்காட்டிக்கொண்டு சகாயஞ்செய்யமாட்டாது.

மகாதர்மமூர்த்தியாம் தங்களையும் வனம்போகவிடுதல் இளையவனை பரதனை ராஜ்யமாளும்படிவிடுதலோ! நன்று! நன்று! இத்தகைய அக்கிரமத்துக்கு நான் சம்மதிக்கமாட்டேன். தாங்களே ராஜ்யம் ஆளுதல் வேண்டும். தங்கட்குப் பிறகு தங்கள் புத்திரர்கள்...... பரதனுக்கு ராஜ்யம் கொடுக்கமாட்டேன். தங்கட்கு வனம்போகும்படியான சம்பவம் எப்போதெனில், தங்கள் புத்திரர்கள் ராஜ்யமாளுகையில்—இதுவே நம்முடைய வமிச பாரம்பரையான தர்மம்" என்றிவ்விதமாய் லக்ஷ்மணசுவாமியானவர் தன் தமையனிடமுள்ள விசேஷ பக்தியினுல் பரிதாபத்துடன் சொல்லுவாராயினர்.

ராமச்சந்திரன்:—(கொஞ்சம் புன்சிரிப்புடன்) "தம்பி லக்ஷ்மணு! நீ கூறும்மொழிகள உலகவியற்கைக்குகந்த மொழிகளாகும். தர்மத்தையும், சத்திபத்தையுந் தழுவி யொழுகும்படியான மார்க்கமாக மாட்டா. சத்வ, ரஜஸ், தமோகுணங்களில் ரஜோகுணத்தை யொட்டிய வார்த்தைகள் நின் வார்த்தைகள். சத்வகுணமயமான காரியங்களில் நம்முடைய மனமானது ஈடுபட்டிருத்தல் வேண்டும். கேவலம் லோபகுணப்ரதானமாம் ரஜோகுணத்தையும், தமோகுணத்தையும் உத்தம ராஜபுத்ரர்களாய நாம் பற்றியொழுகுதல் தகாது!

தகாது! பெரியோருடைய கட்டளையை நாம் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றோமே யல்லாமல் நிராகரிக்கக் கடமைப்பட்டவர்களல்லேம்" என்றிவ்விதம் மீண்டும் தத்வோபதேசஞ் செய்யத்தொடங்கும் தமையனாரைநோக்கி லக்ஷ்மணன், "அண்ணா! முதன்முதலில் மகாராஜா தங்கட்கு அரசளிப்பதாய் வாக்குத்தத்தஞ்செய்தனர் மறுநாளே மறுதளித்தனர். ஆகையால், அவர் சுயபுத்தியுடன் இல்லை என்று விளங்கவில்லையோ? ராஜ்யாதிகார்யத்தை ஒப்புக்கொள்ளுங்கள். நான் தங்களுக்காக ராஜகாரியங்களை யெல்லாஞ் செய்து வருகின்றேன். அழகுக்காக ஏற்பட்டவையல்ல என்னுடையகைகள்; ஆபரணமாக ஏற்பட்டதல்ல என்கையில்வைத்திருக்கும் இந்தவில்; சூரியனைப்போல் அலங்காரத்துக்காகவன்று நானிடுப்பில் சொருகிக்கொண்டிருக்கிற இந்தக்கத்தி, ஐம்பத்துக்காகவல்ல இந்த அம்புராத்தூணியிலிருக்கிற பாணங்கள். சத்துருக்களை கண்டதுண்டம் பண்ணி நாசஞ்செய்யும்படியாய் ஏற்பட்டவைகள் மேற்கூறியவைகள். எவன் என்முன் சத்துருவாய்த் தோன்றுவானோ அவனை முடிக்கவேண்டியதுதான். கத்தியைச் சுழற்றிக்கொண்டு சத்துருவை சம்ஹரிக்கச் செல்வேனேயானால், வஜ்ஜிராயுதம் தரித்துக்கொண்டுவரும் இந்திரனும் எனக்கு நிகரில்லை; இந்தக்கத்தி அவனைக் கொன்றுவிடும். ஆயினும், நானென்ன செய்வேன்! தங்களுடைய அனுமதியில்லாமல் ஒன்றுஞ் செய்வதற்கில்லையே" என்று கண்ணீரை தாரைதாரையாய்ப் பெருக்கிக்கொண்டு, தயவுசெய்து சற்றே உத்தரவுகொடுங்கள். தங்கள் பட்டாபிஷேகத்திற்கு இடையூறு செய்கிறவர்களை துவம்சஞ் செய்துவிடுகின்றேன். நான் தங்கட்கு ஊழியனேயல்லாமல் சுயமாயெதையும் செய்யமாட்டுவேனல்லேன்" என்று பணிந்துகேட்கும் லக்ஷ்மணனை நோக்கி, "அப்பா, லக்ஷ்மணா! வியசனப்படவேண்டாம்; தைரியத்தைக் கைவிடாதே," என்று அவன் கண்ணீரைத் தன் கைக்குட்டையினால் துடைத்து நான் பிதாவின் வாக்கியத்தைப் பரிபாலனம்பண்ணி அவரை சத்தியவர்தியாய்ச் செய்யத்தான் வேண்டும். நியாயமோ, அந்யாயமோ தகப்பனாருடைய கட்டளையை மீறிநடத்தலெங்ஙனம்கூடும்? கூடாதாதலின், நான் வனம்போக வேண்டியதுதான். அப்படி செய்வதுதான் சன்மார்க்கம்." என்று மறுபக்கமாய்த் திரும்பிக்கொண்டு தம்பியைத் தழுவிக்கொண்டபடி 'நீபோத' ஞாபகம்பண்ணிக்கொள்—நாம் அவதார காலத்தில் பண்ணிக்கொண்ட சங்கல்பத்தை—துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தமா யன்றோ நாம் அவதரித்தனம்—அந்த தத்துவத்தை ஞாபகப்படுத்திக்கொள்—தேவகார்யமாம் அவதார பிரயோஜனம் ஆகவேண்டாமா" என்று கூறினர்.

(தொடரும்)

துறையூர் மா. சுப்பராமய்யர்.

## சுந்தரமூர்த்திநாயனர் சரித்திரம்.

(167-ம் பக்கத்தொடர்ச்சி)

இருவரும் சுகமாய் வாழ்ந்துவருங்காலை கடவுள், நாயனர் கேட்ட "அடியார்க்கு அடியனுக வேண்டு" மென்னும் வரந்தந்து, அடியார்கள்மீது பதிகம்பாடுமாறு கட்டளையிட, அதன் வரலாறு தெரியாதுநிற்க, "தில்லைவா ழந்தணார த மடியார்க்கு மடியேன்" என்னும் அடியை யெடுத்துக்கொடுக்க, தேவாசிரியமண்டபமடைந்து திருக்கூட்டத்தை வணங்கி அடியார்கள் சரிதத்தைப் பாடினர்.

இருவரும் சந்தோஷமாய் வாழ்ந்துவருகையில் குண்டையூர்க் கிழவர் என்னும் வேளாளர், நாயனர்மீது அன்புகொண்டு நெல்முதலிய ஆகாராதிகள் நாடோறும் கொடுத்து வருவது வழக்கம் மழையின்மையால், ஒருநாள் நாயனருக்கு நெல்கொடுக்க இன்மையால் வேளாளர் வருந்த கடவுளருளால் நெற்குவியல் ஏற்பட, அதை நாயனருக்குத் தெரிவிக்க, அந்நென்மலையை பரவையார் வீட்டுக்குக் கொணரும்படித் திருக்கோளிலீஸ்வரரைத்துதிக்க, அவர் ஆணைப்படி அன்றிரவில் பூதகணங்கள் பரவையார் வீட்டிலும், திருவாரூர் முழுமையும் நென்மலையாக்கின. பரவையார் ஜனங்கள் யாவரும் தத்தம் வீட்டினிடத்துக் கிடக்கும் நெற்குவியலை வாரிக்கொள்ளலாம் என்று பறை யறைவித்தனள்.

சிலநாளைக்குப்பின் நாட்டியத்தான்குடியில் வசிக்கும் கோட்புலி நாயனர் வேண்டுகோளின்படி அங்கு சென்று அவரில்லத்தில் அமுதுண்டபின், கோட்புலிநாயனர் தமது இருபுத்ரிகளாகிய, சிங்கடியார், வனப்பகையார் என்னும் மாதர்களைக்கொடுத்து அடிமையாகக்கொள்ளும்படி வேண்டிநிற்க, நாயனர் அவர்களைத் தமது புத்ரிகள் என்று சொல்லி உச்சிமோந்து அவர்கள் விருப்பத்தையறிந்து தான் சிங்கடியாருக்குப் பிதா என்றதினால் சிங்கடியப்ப ரென்று வைத்து கோட்புலிநாயனரைச் சிறப்பித்துப்பாடினர். பின்பு திருவலிவலத்துக்குப்போய் கடவுளைத் தரிசித்துக்கொண்டு திருவாரூரை யண்மினர். அக்காலையில் பங்குனி உத்திர திருநாளைப் பார்க்க பரவையார் பொன்கேட்க, அது கொண்டுவரும்பொருட்டு நாயனர் திருப்புகலூரையடைந்து சுவாமியைத்துதித்து ஓர் மடத்திற்குச் சென்று, செங்கற்களை தலையணையாக வைத்து நித்திரை போனர். விழித்து எழுந்ததும் அக்கற்கள் பொன்னுயிருக்கக்கண்டு சுவாமியைத் துதித்து, திருப்பனையூர்போய் சுவாமியைத் தரிசனம்செய்து திருவாரூர் சென்றார்.

சிவனருளால் நன்னிலமடைந்து சுவாமியைவணங்கி அந்தணர்களழைக்க திருவீழி மலையை யடைந்து பிறகு திருவாஞ்சியம்,

திருச்சித்தீஸ்வரம்போய் தரிசித்துக்கொண்டு தொண்டர்கள் அன்போடு வரவேற்க திருப்புத்தூரைச்சேர்ந்து கடவுளின்மீது தேவாரமாலை சூட்டினார் பின்பு திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், சிவபுரம், திருக்கலையநல்லூர், திருக்குடமூக்கு, திருவலஞ்சுழி; திருநல்லூர், சோற்றுதுறை, கண்டியூர், திருவையாறு, திருவாலம்பொழில் முதலிய தலங்களையடைந்து சிவனை துதித்து அங்கிருந்து கடவுள் ஆணையின்பேரில், மழபாடி, திருவானைக்கா முதலிய சிவக்ஷேத்திரங்களை தரிசித்துக்கொண்டு, திருப்பாச்சிலாச்சிரமம் போய் பொன்வேண்டிக் கொடாததினால் "இல்லையோர் பிரானார்" என்னும் பாடலைப்பாடி பொன்பெற்று திருப்பைஞ்ஞீலி திருவீங்கோய்மலை, கொங்கதேசத்தின் காவேரி தென்கரையிலிருக்கும் திருப்பாண்டிக்கொடுமுடி, அவிநாசி, திருதற்குடி திருவாறைமேற்றளி, திருவின்னம்பர், திருப்புறம்பியம் முதலிய திருப்பதிகளைதரிசித்துக்கொண்டு, திருக்கூடலையாற்றுக்கு சமீபித்தும் அங்கு போகாது திருமுதுகுன்றை நோக்கிப்போக, சிவன் பிராமணராக வந்து நாயனாருக்கு முன்நிற்க, நாயனார் ஐயரைப்பார்த்து திருமுதுகுன்றுக்குப்போகும் நடைவையாது என்று வினவ, இது கூடலையாற்றுக்குப்போகும் வழி என்று சொல்லி நாயனாரை திருப்பி வழிக்காட்டிக்கொண்டே போய் மறைந்தார்.

நாயனார் இதையறிந்து கூடலையாறு, திருமுதுகுன்று இவைகளைதரிசித்துக்கொண்டு பழமலையடைந்து ஆண்டு பன்னீராயிரம் பொன்வேண்டி நிற்க, பொன் கிடைக்கப்பெற்று அதை சிவன் மாக்ஷியை திருவாரூரார்கள் அறியும்பொருட்டு, பொன் எல்லாவற்றையும் மணிமுத்தநதியில்போட்டு திருக்கடம்பூர், சிதம்பரம், கருப்பறியலூர், மண்ணிவளம், படிக்கரை, வாழ்கொளிபுத்தூர், கானாட்டுமுள்ளூர், திருஎதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி, இத்தலங்களைத் தரிசிததுக்கொண்டு திருவாரூரையடைந்தார். சில நாளைக்குப்பின் பரவையாரோடு ஆலயத்திற்கு மேற்குபக்கத்திலிருக்கும் தடாகத்திற்குப்போய் திருமுதுகுன்றர்கொடுத்தப் பொன்னைத்தேட அகப்படாததைக்கண்டு பரவையார் நகைக்க, நாயனார் சுவாமியை வேண்டித் தேட, அகப்பட்டது. பின்பு அப்பொன் மாற்றுக்குறையைக் கண்ட நாயனார் சுவாமியைதோத்திரஞ்செய்ய, பொன் உரைதாழாதிருந்தது. அதைக்கொண்டுபோய் இருவரும் இன்புற்றிருந்தனர்.

பின்னர் சிவதலயாத்திரை செய்யவிரும்பி, நள்ளாறு, திருக்கடவூர், திருமயானம், திருவீரட்டானம், திருவலம்புரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருநனிப்பள்ளி, திருச்செம்பொன்பள்ளி, திருநின்றியூர், திருநீடூர், திருப்பங்கூர், திருக்கோலக்கா, முதலிய திருப்பதிகளுக்குச் சென்று, பின்பு சீர்காழிக்குப் போய் திருஞானசம்பந்தரைத் துதித்து குருகாவூருக்குப்போக எத்தனிக்கை

யில், பசியினுல்வருந்தும் நாயனருக்கு சிவன் வேதியராகவந்து, வெயிலின் உஷ்ணத்தைத் தணிக்கப் பந்தரமைத்து, அப்பந்தலில் நாயனருக்கும் அவர் தொண்டர்கட்கும் அன்னமளித்தார். உண்ட பின்பு நாயனர் நித்திரை போய், விழித்துப் பார்க்கையில்; பந்தரும், யறையவரையுங் காணுதிகைத்து, இவைகள் யாவும் எம்பிரான் திரு விளையாடலே என்றுன்னி ஆனந்த சாகரத்திலாழ்ந்து, குருகாவூர், முக்கழிப்பாலை, சிதம்பரம், திருத்தில்லை, திருநாவலூர், திருக்கழுக் குன்றம் முதலிய சிவதலங்களை வணங்கிக்கொண்டு திருச்சூர் போய் சுவாமி தரிசனஞ் செய்த பின்னர், நாயனர் பசியோடிருப்பதை யறிந்து எம்பிரான் பிராமணராகி பிக்ஷையெடுத்துவந்து, நாயனரை உண்பித்து மறைந்தார்

காஞ்சிபுரம்சென்று ஏகாம்பரநாதனைத் தரிசித்துக்கொண்டு ஓணகாந்தன்றளியை அடைந்து பொன்பெற்று, திருப்பனங்காட்டூர், திருமாற்பேறு திருவல்லம், திருக்காளத்தி, ஸ்ரீசைலம், திருக்கேதார மலை முதலிய சிவக்ஷேத்திரங்களை வணங்கிக்கொண்டு திருஒற்றியூர் சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு அங்கு சிலநாளிருந்தார்.

அனிந்ததையார் ஞாயிறு என்னும் ஊரில் ஞாயிறு என்னும் வேளாளக்கிழவற்கு சங்கிலியார் என்னும் பெயரோடு மகளாய் அவ தரித்து நாடோறும் உமையாளைத் தொழாநின்றுள்.

(இன்னும் வரும்)

எஸ். என். ஆர். கூறைநாடு

---

## பூதவதி அல்லது புனிதவதி

என்னும்

## காரைக்காலம்மையார் புராணம்.

---

(248-ம் பக்கத் தொடர்ச்சி.)

24. மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனி
தனை நுகர்ந்த வினியசுவை யாராமைத் தார்வணிகன்
இனையதொரு பழமின்னு முளததனை யிடுகவென
அனையதுதாங் கொண்டுவர அணைவார்போ லங்ககன்றுர்,

(இ—ள்) பத்தினியாராகிய அம்மையாரால் இலையில் பரிமா றப்பட்ட மாங்கனியானது மிக்க மதுரமுடையதா யிருந்ததனுல் அதனை தின்று உருசிகண்ட முல்லைமலர்மாலை யணியுங் குலத்தவ னன தனதத்த செட்டி கனியின் உருசிக்கு ஆற்ருது ஆவல்மீறின வனுய் அம்மையாரை நோக்கி, "பெண்ணே! இதுபோன்றதான பழம் இன்னுமொன்றிருக்கின்றதைக் கொண்டு வந்து வையெனலும்

அம்மையார் அதனைக்கொண்டுவருவதற்குச் செல்வாரபோல் போஜன சாலையினின்றும் நீங்கி சமையல் செய்யுமிடஞ் சென்றார்.

இதில் "கொண்டுவர வணைவார்போல்" என்றதானது அம்மையாரின்∴ அரும்பெருங் குணமாகிய "அன்னை தயையு" மென்பதனை விளக்குகின்றது, மனைவியானவள் கணவனது விருப்பமறிந்தொட்டுந்தன்மையளாக விருக்க வேண்டுமென்னும் நீதிசாஸ்திரப் படியே நடக்கும் மியல்பினராகலின், கணவர்கேட்டும் இல்லையென்று சொல் நேர்ந்தமைபான் மனந்தடுமாற அத்தடுமாற்றத்தால் யாதுந் தோன்றாது அங்கிருந்து விரைந்தகன்றார் ஆதலினால் அவ்விதம் அகன்றதானது கொண்டுவரச்சென்றமை போன்றிருந்தது என்பதை யொட்டி ஆசிரியர் "கொண்டுவர வணைவார்போலகன்றார்" என்றார். இதில் இன்னொரு கருத்துமுண்டு. அஃதியாதெனின், அம்மையார் பதிபக்தி யுடைமையினாலும், அப்பதி எப்பதி யென்பதை நன்கறிந்திருந்தமையினாலும் முதற்பதியாக பசுபதியைத் தன் திருவுளத்துத் துதித்துக்கொண்டே இகலோக போகபதியாகிய கணவனுக்குப் பணிவிடை செய்யு மாற்றலுடைமையினாலும், "இனைய தொரு பழமின்னு முளத்தனையிடுக" வென்றலும், மேளிலை நோக்கத்திலிருந்தவர் அச்சமயம் கணவன் மொழி அஞ்செவிப்படலும் "அனையது தாங்கொண்டுவர அணைவார்போல் அங்ககன்றார்" என்பதை அம்மையார் பாலாக்கின், வாய்மையல்லாததை மனத்தினின்றும் அகற்ற வேண்டுவது கடமையென ஆகமங்களும், தருமசாஸ்திரங்களும் முறையிட மற்றொரு கனியை அடியாருக்குப் படைத்துவிட்டமையினால் அது தமமிடமில்லை யென்பதை நன்கறிந்த புனிதவதியார் அக்கனியைக் கொண்டுவர அணைவார்போல அங்குநின்றும் நீங்கியது கபடநடிப்பாகுமன்றோ? அது அவர்மீது குற்றமாகாதோ வெனின் ஆகாதென்றே கொள்ளவேண்டும் ஏனெனில் சிவானுக்கிரகமுற்றும் உணர்ந்த பக்தசொரூபியாகிய புனிதவதியம்மையார் உண்மைப்பக்தருக்கு உண்ணுமாறு அளித்த பொருள் அழிந்ததாகாதாதலினால் அது தவறேயன்று. எதனாலெனின்,

"எந்தாயென விரங்கு மெங்கண்மேல்
வெந்துயரம் வந்தாலது மாற்றுவான்" 121

என்பதனாலும், அடியார் துன்பத்தைக் காணச்சகியாத கருணைக் கடலாதலாலும் "வேண்டுவார்வேண்டுவதையீவான் கண்டாய்" என்னும் உண்மைக்குப் பாத்திரமாவதினாலும், "கருத்தறிந்து முடிப்பான்" என்றும், துதிக்கப்படுபவனும்—துதிக்கப்படப் போகிறவனும் அடியார்க்கு ஏற்படும் குறைகளைத் தீர்த்து ஆட்கொண்டருளுவதே விரதமாகவுடையவனும் ஆகிய எல்லாம்வல்ல இறைவன்

121, அற்புதத்திருவந்தாதி.

பாற் சென்றூற் பெறப்படா அரும்பொருளும் உண்டோ? என்னும் உணர்வு தோன்ற அங்ஙனஞ் சென்றூர் என்பது எவற்றினுஞ் சாலச் சிறப்புடையதே. இதனை

" வாயானை மனத்தானை மனத்துணின்ற கருத்தானைக்
கருத்தறிந்து முடிப்பான் றன்னைத்
தூயானை தூவெள்ளை யேற்றான் றன்னைச் சுடர்த்திங்கட்
சடையானை தொடர்ந்து நின்றென்
றாயானைத் தவமாய தன்மை யானைத் தலையாய
தேவாதி தேவர்க் கென்றுஞ்
சேயானைத் தென்கூடற் றிருவா லவாய்ச் சிவனடியே
சிந்திக்கப் பெற்றே னானே." 122

" தூண்டு சுடரனைய சோதி கண்டாய் தொல்மரர்
சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய் கருதுவார்க்
காற்றவெளியான் க டாய்
வேண்டினுர் வேண்டியதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லா
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டு ளுறையு மணாளன் றானே" 123

என்று மிருப்பதினாலும் அம்மையார் "அங்ககன்றார்" என ஆசிரியர் விதந்தோதினுர் போலும். நிற்க, பேய்ப்பிடியுண்டாரது செயலெல்லாம் பேயின் செயலேயாதல் போலப் பசுபோத மற்றுச் சிவபோதம் உற்ற அம்மையாரின் செயலைச் சிவன் செயலாக்கினும், பொருத்தமாகுமன்றோ? அன்றியும் பக்தியெனும் சாகரத்துள் மூழ்கிய மெய்த்தொண்டர்களின் செயல்கள் மாய அந்தகாரத்தில் மூடியதான லௌகிக வழக்கின் எல்லைக் குட்பட்டதாகுமோ? ஆகாது. இதனை

" சிறையு முண்டோ செழும்புனன் மிக்குழீஇ" 124

என்பதற்கிணங்க பக்தி பெருக்கெடுத்துப் பிரவகிக்கில் பிரபஞ்ச மென்னும் அரணுக்குத் தடையாகுமா? இக்காரணங்கொண்டே சிறுத்தொண்டர், இயற்பகையார் முதலிய பக்தர்களின் செய்தற் கரிய செய்கைகளை ஊனக்கண்ணால் நோக்கி இகழ்தலைத் தவிர்த்து ஞானக்கண்ணால் நோக்கிப் புகழ்வர் நல்லோர்.

(தொடரும்)

வா. ரா. கேய்க்வார்.

---

122, 123, தேவாரம். 124 மணிமேகலை.

## பத்திரிகை.

தற்காலத்தில் வெளிவரும் பத்திரிகைகள் பெரும்பாலும் விளம்பர பத்திரிகையென்ருவது விளம்பரகியாட்லாக் என்ருவது அழைக்கலாம், பத்திரிகை வளர்ச்சிக்கு சந்தாதாரரும், விளம்பரகாரர்களும் முக்கியமானவர்கள் தான் என்ருலும் வரும்படிக்கு தக்கபடி உழைக்கும் புத்திரிகை வெகு சொல்பமே. பத்திரிகையானது வியாபாரி மாதிரி தனது எண்ணம் இவ்வளவுதான் என்று எளிதில் தெரிந்து கொள்ளும் வண்ணம் வெளிவருகிறது; இந்தப்பத்திரிகை யெல்லாம் எவ்வளவு செல்வாக்காக வந்தாலும் சுயநலமில்லாத பத்திரிகையே குறைவாக இருக்கிறது. பத்திரிகையானது கண்ணைக் கவரத்தக்க (டிராமா சின்மாதிரி) சித்திரசகிதமான முறையில் வழவழப்பானகாகிதத்தில் விஷயங்களை வெளியிடுவதைவிட மிகவும் சாதாரணமான காகிதத்தில் குறைந்த சந்தாவுடனும் நிறைந்த அனுபவமும் பெரியோர்களால் எழுதப்பட்ட வியாசங்களுடனும் அதிக பக்கங்களுடனும் வெளிவந்தால் அதுவே நமது பரதகண்டத்தின் மக்களுக்கு கல்வி அறிவு ஊட்டும் பத்திரிகையென்று பலராலும் ஆதரிக்கப்படுமென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

பத்திரிகை தொழில் நடத்துகிறவர்களுக்கு குற்றம் குறைகள் தெரிந்ததைவிட நமக்கு அதிகம் தெரியாவிட்டாலும் நாம் அனுபவத்தில் கண்டதை எழுதினேம். குற்றங்குறைகள் இருந்தால் நீக்கி குணத்தைக் கொள்ள வேண்டுமென்றும் அதன்படி நடக்கவேண்டுமென்றும் நினைப்பார்களென்று நம்புகிறேன். நம இராஞ்சித போதினிக்கு கடவுள் கருணை புரிவாராக. R. Subbachar,

---

## தேசபக்தியுள்ள ஓர் பெண்மணி.*

கான்டன்ஸ் என்னும் ஏரி ஆகாயமளாவிய மலைகளாற் சூழப்பட்டது. பளிங்குபோற்காணும் நற்புனலைக்கொண்டது. இவ்வேரியினுள், பிரகாசிக்கும் நக்ஷத்திரத்தோடு கூடிய ஆகாயமும், அன்ன நடைபோற் செல்லும் கார்க்கூட்டங்களும் காணலாம். ஆகையினல் விண்ணின் சிறிது பாகம் இவ்வேரியினுள் வீழ்ந்து விட்டதோ என்று ஐயமுறலாம்.

இவ்வேரியின் தென்கிழக்குமூலையில் டயரல் ஆஸ்டிரியாவுக்குச் சொந்தமான பிரக்கன்ஸ் மாநகரம் உள்ளது. இந்நகரை முன்னூறு வருடங்கட்குமுன்னர் ஓரிரவில் எவ்வாறு எதிரிகளிடத்தினின்று ஓர் பெண்பாலால் காப்பாற்றப்பட்டது என்பதைப்பற்றி ஓர் கதைகூறுவாம்.

---

* This is translated by myself from the "Legend of Bregenz" written by Adelaide proctor.

இந்நகரின்கண் வாழாநின்ற ஓர் எளிய பெண் தன் சொந்த தேயத்தைவிட்டு ஜீவனஞ்செய்யும் வண்ணம், அன்னிய நாடாகிய ஸ்விஜ்ஜர்லாந்துக்குப் போனாள். ஆண்டு அவள் ஓர் அன்புள்ள சீமானிடத்து வேலைக்கமர்ந்து, அவரது ஆடுமாடுகளை ஓட்டிப்போய் வயிரார புல்லுந் தண்ணீருங் கொடுத்து மேய்த்து வருவாள். இவ்வாறு இவள் பல வருடங்கள்வரை சுகமாய் வாழ்ந்து வந்தனள். ஆனதுபற்றியே இந்நாட்டைத்தாய் நாடென்றும், ஆங்குள்ளவர்களைத் தன்னினத்தார்கள் என்றும் எண்ணி தன் தாய் நாட்டை முற்றிலும் மறந்தனள்.

இவள் காலையிலும், மாலையிலும் கடவுளின்முன் மண்டியிட்டுத் தன் தாய்ப்பாஷையினால் ஸ்தோத்திரஞ் செய்வாள். தன் தாய்நாட்டின் இனிய பாடல்களைப் பாடித் தன் எஜமானர் குழவிகளை மகிழ்விப்பாள்.

இவ்வாறு இவள் மன நிம்மதியோடு காலங்கழித்து வருகையில் திடீரென்று குடியானவர்கள், பொன்னிறமேனியோடுவிளங்கி சாய்ந்துகிடக்கும் தானியங்களை அறுவடைசெய்யாது ஏதோ ஓர் காரியத்திற் கண்ணுங் கருத்துமாய் நின்றனர். பெண்டிர்களும் கைத்தொழிலை யொழித்துத் தத்தங் கணவனைச் சூழ்ந்து கொண்டனர்.

ஓர் மைதானத்தின்கண் இப்போர்வீரர்கள் யாவரும் திரள் திரளாய் வந்துகூடினர். எவ்வாறு தேசத்தை கைப்பற்றுவது என்று இரகசியமாய் ஆலோசித்தனர். இதைப்பிறர் அறியாவண்ணம் சிலர் அங்குமிங்கும் அலைந்து ஊரைக் காவல் புரிந்தனர். வீரர்கள் மின் மினிபூச்சிபோல் பிரகாசத்தைச்சொரியும் தத்தம் ஆயுதங்களை புதுப்பித்தனர். மாலைப்பொழுதில் அவ்வீரர்கள் யாவரும் ஒன்று கூடினார்கள். கவலையும் அச்சமும் பகலவன் முன்கண்ட பனிபோல் நீங்கின. உருசியான பதார்த்தங்களோடு கூடிய ஆகாரம் வைக்கப்பட்டிருந்தது. வீரர்கள் யாவரும் அதிமகிழ்ச்சியுடன் விருந்துண்ண ஆரம்பித்தனர். கிராமத்தலைவன் திராக்ஷை இரஸமுள்ள பாத்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு எழுந்து "சகோதரர்களே! பகலவன் மேற்கடலில் ஆழ்ந்தனன். இன்னும் ஒருநாள்தானிருக்கிறது, பிரக்கன்ஸ்மாநகரம் நங்கையில் வருவதற்கு பிரக்கன்ஸ்மாநகரம் நமக்குச் சொந்தமாகவேண்டும், விரோதிகள் அடியோடு அழியவேண்டும் என்று கடவுளைப்பிரார்த்தித்து இரஸத்தைப் பருகுங்கள், என்று சொல்லி திராக்ஷை இரஸத்தை பருகினான்.

இதைச்செவியுற்ற இம்மாதின் உடல் நடுங்கிற்று, பயத்தினால் மூர்ச்சையாயினள். அவளுக்கெதிரில் வளமான பிரக்கன்ஸ்மா நகரந்தோன்றிற்று. கூடகோபுரங்கள் விளங்கின, தன்னைச் சூழ்ந்துள்ளவர்கள் யாவரும் தாய்நாட்டின் விரோதிகள், தன்னைச்சார்ந்தவர்களின் மதியும், சென்ற இளம்பருவமும், பருவத்தினாலேற்படும்,

பிரதி ஒலியும் நம்மவள்! நம்மவள்! என்று கதறின. சுற்றிலும் நடக்கும் ஆரவாரங்கள் அவள் காதில் விழவில்லை. சுவிஜ்ஜர்லாந்தின் பசும்புல் வெளிகள் மறைந்தன பிரக்கன்ஸ்மா நகரத்தின் தோற்றமாத்திரம் அவள் ஞானக்கண்ணிற்றோன்றிற்று. "முன்னேற் செல், தாய்நாட்டைக்காப்பாற்று, தாய்நாட்டிற்காக உயிரைக்கொடு' என்று இரத்தாசயங் கதறிற்று. காலமோ நடுயாமம். மௌன இராஜுவண் அரியாசனத்திலிருந்து முகக்கண்ணாடியாகிய ஏரியையும், பன்னாளாகச் சிருஞ்சிறப்பும்பெற்று துஞ்சுகின்ற பிரக்கன்ஸ்மா நகரையுங் கண்ணுற்றது. அதியுன்னதமான மலையின்கண் வீற்றிருக்கும் அந்நகரின் கோட்டைக்கொத்தளங்களின் நிழல் இவ்வேரியின் ஜலத்தில் ஆடிக்கொண்டிருப்பதுபோல் காணப்பட்டது.

முகம் வெளுத்தது, மெள்ளமெள்ள நடந்துலாயத்தையடைந்து சிறந்த வெண்கலிமாவை யவிழ்த்து அதின்மீதேறி, தன் தாய்நாட்டை நோக்கி நடத்தலாயினள். குதிரை நள்ளிருளில் வாயுவேகம மனோவேகமாகச் சென்றது கார்முகில் கனத்து மழைபொழியும் போலிருந்தது. பரல் செறிந்து விளங்கும் கானகங்களையும், நதிகளையுங் கடந்து, நடுயாமத்தின்கண் பிரக்கஸமாநகரின் கோட்டைவாயிலையடைந்து ஆங்குள்ள காவற்காரர்களிடத்து தான்வந்த செய்தியைப் பகர்ந்தாள்.

உடனே வீரர்கள் தத்தம் ஆயுதங்களுடன் வந்து கோட்டையைக் காவல்புரிந்து மறுநாள் காலையில்வந்த எதிரிகளை வெருட்டி அடித்து நகரைக் காத்தனர்.

இப்பரம உதவிசெய்த அம்மணியை அந்நகரவாசிகள் மறவாது ஞாபகசின்னமாக அவ்வம்மையையும், அவள் ஏறிவந்த குதிரையையும் போல கோட்டைவாயிலிற் கற்சிலை வெட்டுவித்து, அவள் வந்த பன்னிரண்டுமணியில் பன்னிரண்டுமணி என்பதற்குப் பதிலாக அம்மையின் நாமதேயத்தையே கூறிவருகின்றனர். சுபம்!

-கூறைநாடு எஸ் என். இராமு.

## காவிரி விரிகோலம் அல்லது கலிகாலக் கொடுமை.

ஆரிய சகோதரர்காள்! எல்லாருக்கும் எல்லாவித நியாயான்யாயம் செவ்வனே தெரிந்திருந்த போதிலும் நமது சிற்றறிவிற்கெட்டிய மட்டில் "ரஞ்சிதனின்" மழலையால் சிலவற்றைக் கூறாதிருக்கக் கடவதல்லவென இங்ஙனம் குறிப்பிடலாயினம்.

காவிரியாற்றின் தென்கரையில் தாயுமானசுவாமிகளது திவ்விய க்ஷேத்திரமாம் திருசிரபுரமும், காவிரியாற்றை மாலையாய்க் கொண்டு விளங்கும் ஜம்புலிங்க க்ஷேத்திரமும், ஸ்ரீரங்க க்ஷேத்திர

மும், மற்றுமுள்ள கிராமாந்தரங்களும், அடைந்த சேதங்களையும் அவ்வாறே மேற்கே சில பாகங்களும் வருண வியாபகத்தில் மூழ்கித் தவித்ததையும் என்னவென்றியம்புவோம்! ஆச்சரியம்! ஆச்சரியம்! கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இனி கேட்கப்போவதும், கண்டு வருந்தவாவதும் அபரிமிதமானவையென முன் எச்சரிக்கையோவென்று சொல்லும்படி, காவிரியுங் கொல்லிடமும் ஒன்று கூடி மத்தியிலிருந்த ஸ்தலங்களை வருணனுக்கிரைதந்தும் ஆங்காங்கு கோர நிகழ்ச்சிகள் நிகழ்ந்தனவற்றை பற்பல பத்திரிகைகள் முறையிடலாயின. ஆயினும் நாம் கருதிக்கூற வருதல் யாதெனின் இன்று காவிரி விரிந்தது நாளைக் கடலே விரியலாமன்றோ? காவிரி விரிவுக்காயினும் கனதனவான்கள்கூடி முன்வந்து பொருள் செலவழித்துக் கூடியமட்டில் அணைகள் போட்டு வேண்டிய சாதனங்களைத் தேடலாயினர். கடலே விரியுமானல் எத்தகையஉபாயங்களும் பயன்பெறுவன்றோ! ஆகலின், தெய்வீக நிகழ்ச்சிகளைத் தடுத்து, சீர்பெறச் செய்ய வேலா வற்ப மானிடராய நாம் மனவமைதியுடன் மேலோர் ஒருவர் பாடியிருக்கும் உபதேசப்பாடலைப் படிப்போமாக!

“ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு வுயர் செல்வமெல்லா
மன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமு நட்பும்
நன்றென்றிரு நடு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென்றிரு மனமே யுனக்குபதேச மிதே.”

என்றார் பட்டினத்தார். இந்த உபதேசங்களை எவரும் கவனித்து நடப்பதில்லை. இந்த உபதேசத்தையே சிரஸாய் வகித்து குரு உபதேசமெனக் கருத்தினில் கொண்டு பிரதிபதத்தினையும் பிரயோகித்திருக்கும் காரியா காரியம், நியாயாநியாயம் செவ்வனே நம்முன் பிரதிஜனமும் தத்தம் மனச்சாட்சிக்கொப்ப உய்த்துணர்வார்களேயானல், ஸ்வகீயமான சநாதன வழக்கவொழுக்கங்களாய நீதிவிளங்காது போமோ! ஆரிய சிகாமணிகாள்! ஆழ்ந்து யோசித்துப்பாருங்கள்! ஆதியில் மனுவினல் வகுக்கப்பட்ட வர்ணாச்சிரமங்கள் சீர்குலைந்திருக்கின்றன சநாதன வழக்க ஒழுக்கங்கள் தலைகீழாய் மாறிப்போய் விட்டனவே! பெரியோர் சிறியோர் என்ற மரியாதை லேசமும் இல்லாமல், தந்தையருக்கு மக்களில்லாமலும், அண்ணனுக்கு அம்பியில்லாமலும் புருஷனுக்கு பெண்டாட்டியில்லாமலும், மேலோர் கீழோர் என்ற வார்த்தை கெட்டும் போய்விட்டதே. இவ்வுலகிய பிரகிருத நிகழ்ச்சிகளைக் கண்டும் பொருவார்களோ விண்ணவர். திரிலோகாதிபதியாம் இந்திரனின் ஆளுகைக்குட்பட்டதிந்த உலகமென்று நினைத்திலர் போலும். எங்கும் பிரகாசமாய் நிறைந்து கடவுள் ஒருவர் விளங்கிக்கொண்டிருப்பதான எண்ணம் நம்மவர்கட்கு லவலேசமுமில்லாமலே போய்விட்ட திக்காலம். ஆயிரஞ்சொல்லியாவதென்ன; ஒழுங்கு கெட்டுத் தடுமாறலாயிற்று. விண்ணவர் சிறிச்சிதைக்கின்றனர். மானிடராய நாம் மாண்டுமடிகின்றனம்.

நமது பாதுகாப்புக்குகந்த சாதனத்தைத் தேடுவோமாயின் சுகமுற லாம் திண்ணம். இக்கொடிய காலத்தைக்கருதி நமது அன்பார்ந்த காலஞ்சென்ற பாரதியார் பாடிய பாடலின் விந்தையை நோக்குறு வீர்களாக.

" ஜப்பான் ஜிண்டான் தப்பாதுண்டால்
தாழ்வுடன் வாழ்வு குன்றுமே ! ஜ

1 உள்ளூரில் மருந்திலையோ
உங்களுக்குப் பொருந்தலையோ
ஹிகோசெண்டும் க்ளாஸ்கோமுண்டும்
ஏற்குமோ உடல் கேட்குமோ ஜ

2. கைக்களயர் துணியிலையோ
கண்ணைக் கவரலையோ
கொண்டமர்வி ய ரண்டையில் நின்றிட
சண்டையிட்டன்னிய முண்டையைப் பார்க்கும் ஜ

3 சோப்பு சோடா காப்பி ஜாடா
வொழிக்கணு மெல்லாந் தொலைக்கணும்
முன்னாளில் குளியிலையோ
சோப்பில்லாமல் குளியிலையோ
நம்மாயுள் வலுக்கலையோ ஜ

4. பெண்டு குங்குமங்கள் மஞ்சள் பூச்சும் விடலாச்சுதே
டாய்லெட் முக(face) பௌடர் ஷர்ட்டுடனே கர்ச்சிப்புமாய்
சுந்த சூன்ய முகத்தையும் பார்க்கவே
நம்நாட்டு நாகரீகத்தையும் போக்கிடும் ஜ

5. க்ராப்புங் கோட்டுஞ் சிராயும் பூட்ஸும் தேகத்திற்கழகாகுமோ
நம் நாட்டிலுடை யிலையோ
நாகரீகப்படவிலையோ
பாதிமீசை மீதிலாசை பாரதர்க்கழ காகுமோ ஜ

6. அவமான மிதை விடவோ !
வெகுமானந்தனைப் பெறவே !
உத்தமப்பெண்டுகள் மற்றோரைக்கண்டிட
வேஷக்ஹாரண்டென்றுரை கோத்திடச்செய்திடும் ஜ

என்றபடிக்கன்றோ நடைபெறுகின்றதிக்காலம். இவ்வாறாயின் ஆரியர்குலம் ஒக்குமோ ! நமது சிற்றறிவிற் கெட்டியமட்டில் உய்த் துணர்ந்து பார்ப்போமானால், புண்ணிய பிரதமும், மகாபாவங் களைப் போக்கவல்லதும், பதித பாவனியும், மிக்கவமைதியுமான தெக்கணகங்கையாம் காவிரியாறும் மீறிக்கரை புரண்டு உலகில்நாசத் தைச் செய்ததுண்டோ ? பிரகிருத கோரமான சம்பவத்தைப்போல்

நாம் இதற்கு முன் னெப்பொழுதாகிலும், சுகுண நதியாம் காவிரி மீறிப்பொங்கிக்கரை புரண்டு கிராமங்களேயும் பட்டினங்களேயும், நாசமாக்கி சீர் கேடுறச் செய்ததாய்க் கேட்டாவ திருக்கின்ருேமோ! இல்லேயேயில்லே. ஆனல் பிரகிருத அதர்மங்களேச் சகிக்கமாட்டாமல் கரை புரண்டழிக்கலாயிற்ருே! அல்லது வருணனேக்கொண்டு வாஸவன் தன் பிரகிருதி குணத்தைக் காட்டும்படி செய்து, நம்மைத் தூண்டி எச்சரிக்கை செய்யலாயினனே!

நாம் காண்பன வெவையும் நனவல்ல கனவென்றெண்ணி பொருளேயே பெரிதாயெண்ணி சுயநலங்கருதாமல், பொதுநலங்கருதி புகழுடம்பு பெற்று உய்யவே வகை தேடவேண்டும். இப்படியாக தத்வமின்னதென உணராமல் வீண் காலப்போக்காய்ப் பிதற்றுவதில் பயன் சிறிதுங்கண்டோமில்லே. முன்நிகழ்ச்சியாம் ஜப்பான் சீர்கேடான சம்பவமொன்று பிரகிருத கோரசம்பவம் மற்ருென்று. இவைபோன்ற சில்லரைப் பிரளயங்கள் இனி எவ்வளவோ! இவைகட்கெல்லாம் பரிகாரம் நாம் ஒவ்வொருவரும் குலாச்சார மதாச்சார சநாதன வழக்க வொழுக்கஞ் சீர்கேடுற்றுக் கெடாமல் கூடிய மட்டில் கடவுள், பெரியோர், பெற்ருேர், மற்ருேர் குரு இவர்களிடம் பயபக்தி விசுவாசங் குறையாமல் நிகழ்த்துவதேயாம். "ஸ்ரீ ராம் ஜயராம ஜெ ஜெ ராம்" என்ற பஜனேயும் சிலாக்கியதாமேதான.

சுபம்! சுபம்!! சுபம்!!! துறையூர் மா. சுப்பராமய்யர்.

## சாந்தவதி.

(316-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தவள்—தாங்களென்னே பார்த்தபோதுதான் வந்தேனென்றெண்ண வேண்டாம் நான் இவ்விடத்திற்கு வந்து சுமார் இரண்டு நாழிகைக்கு மேலாகிறது. இதுவரையில் வராமலிருந்ததற்கு காரணம் யாதெனில் தங்களேச் கண்டவுடன் அருகில் சென்று தேறுதலான வார்த்தைகளே சொல்லி நீங்கள் கொண்டிருக்கும் சோபத்தை யாற்றுவோமென்றெண்ணி வருஞ்சமயம் தங்களுக்கு பின்புறத்தில் பெருமபயங்கரமான தொனியொன்று கேட்டது அக்கூச்சல் யாதாயிருக்குமென்று நானும் அச்சங்கொண்டவளாய் சற்று விலகி ஓர் செடியின் மறைவில் ஒதுங்கி நின்றேன். மேல்புறவாசலின் பக்கமிருந்து இரண்டு சிம்மங்கள் அதிவேகமாய் ஓடி வரகண்டேன் உடனே பெண்ணுடைய நினேவு தடுமாறி திடுகிட்டு பயமேலிட்டு செடியின் கொம்பை கையில் பிடித்த வண்ணம் ஸ்மரணேயற்று யாதொன்றும் புலப்படாமல் ஸ்தம்பித்து நின்று விட்டேனென்றே சொல்லவேண்டும். வந்த சிம்மங்களிரண்டும் பின்னவழியில் சென்றதுகளென்று யெனக்கு தெரியாது ரொம்பநாழிகை சென்று என்னே

பிடித்திருந்த பயமானது விலகி நினைவும் ஊடாடிற்று கண்களை விழித்து நாலுபக்கங்களிலும் பார்த்தேன் எதிராக முன்வந்த சிம்மங்களை காணுதால் கொஞ்சம் தைரியமடைந்தேன். அவைகளால் தங்களுக்கேதாவது ஆபத்துகள் நேர்ந்துவிட்டதோ வென்று ஐயமுற்றேன்: ஆனால் நீங்கள் அவ்வாறன்னியில் சுகமாய் யாதொருதீங்கில்லாமலிருப்பதை பார்த்து சந்தோஷமடைந்தேன். கடவுளானவர் தங்களுக்கு மென்னாளும் பிழையின்றி க்ஷேமத்தை கொடுக்க வேணுமென்று ஸ்தோத்திரஞ்செய்தவளாய் அருகில் சென்று வார்த்தையாட ஆவலும் குதூகலமும் யேற்பட்டதினால் தங்களை நாடி வரலானேன்.

நான் பல நாளாய் கவலையினால் வாடியிருக்கிறேனென்றும் ஒருவரை சதா நினைத்து மெலிவடைகிறேனென்றும ஒருவருடைய கைக்குள் சிக்கி அவஸ்தையடைகிறேனென்றும் நீ யெப்படி தெரிந்து கொண்டா யென்றும் வேறொருவர் சொல்லாவிட்டால் உனக்கெவ்விதம் புலப்படுமென்றும் சந்தேகங்கொண்டிருப்பதுடன் கேரிலும் கேட்கலுற்றீர்கள். சாதாரணமாய் ஒருமனிதரின் முகத்தைப் பார்த்த நிமிஷமே அவர்களின் தற்கால நிலைமையை அதிசீக்கிரத்தில் கண்டுகொள்ளலாம் அதிலும் மனதில் கவலை கொண்டு பல நாளாய் அவஸ்தைப்படுவோரை வெகு யெளிதில் தெரிந்துகொள்ளகூடுமென்றால் தங்களுடைய விஷயத்தை நான் கண்டு கொண்டதைப்பற்றி அதிகஞ்சொல்ல வேண்டியதில்லை. இப்பொழுது நீங்கள் மனத்தில் யேற்பட்ட சோபத்தையடக்கி கவலையில்லாதவர்போல் கொஞ்சந் தைரியமாயிருந்தாலுங்கூட சற்றுமுன்னிருந்த நிலைமையும் முகத்தின் வாட்டமும் இதேசமயத்திலும் இல்லாமலில்லை. இனிமேல் தங்களுக்கு என்னால் என்னவிதமான ஒத்தாசை வேண்டுமோ அதை தெரிவிப்பீர்களானால் காலதாமதமன்னியில் வேண்டிய உபகாரத்தைச் செய்ய சித்தமாக காத்திருக்கிறேன்.

பெண்—கருணாநிதியாகிய கடவுள் யேழையின்மேல் கிருபை கூர்ந்து பல நாளாய் துக்கசாகரத்தில் மூழ்கி அவஸ்தைபடும் யென்னையும் யெனது பெற்றோர்கள் முதல் யாவரையும் இப்போது உள்ள ஆபத்தினின்று நீக்கி பழைய ஸ்திதியில் கொண்டு வையாது க்ஷேமமுறச் செய்யவும் யென் மனதில் குடிகொண்டிருக்கும் கவலையும் நீங்கி நான் யெண்ணிய காரியத்தை நிறைவேறும்படி அருள் செய்ய நினைந்தவராய் பல கட்டுகாவல்களுள்ள இவ்விடத்தில் யாரும் வரமுடியாத யென்னிடம் உன்னை வரும்படி அனுப்பினாரென்று அவரை பலமுறையும் வணங்கி ஸ்தோத்தரிக்கின்றேன். நீ இதுவரையில் சொல்லிவந்த வார்த்தைகளைக்கேட்டு யெனக் கெவ்விதத்திலும் சகாயஞ் செய்வா யென்றும் உன்னால் யென் கஷ்டம் சொல்பமாவது நீங்கக்கூடுமென்று நம்பியிருக்கிறேன் முதலிலுன்னை கண்டபோது

சந்தேகங்கொண்டேன் மனமானது ஒருவழி நில்லாது பலவழிகளி லும் சென்றது. ஆனால் இப்பொழுது அவ்வாறன்னியில் சமாதான மாகவே யிருக்கிறேன்.

வந்தவள்:—என்விஷயத்தில் நீங்கள் பூரணமாக நம்பி இருக் கலாம் நான் ஜெனனமெடுத்த இதுவரையில் ஒருவருக்கும் பொல் லாங்கு செய்தவளல்ல பன்னிப்பன்னி சொல்வதிலப்பிரயோசனமில்லை பின்னால் நீங்களே அநுபோகத்தில் கண்டுகொள்ளலாம்.

பெண்:—தான் எனக்கொரு பொல்லாங்கு நேராமலும் நானி ருக்கும் இம்சையினின்று நீக்கி காப்பாயென்ற நம்பிக்கையானது பூரணமா யிருக்கிறது. இருந்தாலும் ஒருவர் சொன்னதை மறந்து வேறுவிதம் மாறிவிடுவாயோவென்ற எண்ணமும் முதிர்ந்தவயதுடை யவளாய் இருக்கின்றதனால் எந்தவிதத்தில் உதவி புரிவாயோ என்று யோசிக்கிறேன்.

வந்தவள்;—நீங்கள் சொல்வதுபோல் வயது சென்றவளாயிருந் தாலுங்கூட நான் பார்க்கும் காரியங்களும் கிழமாகமாட்டாது. சொன்ன சொல்மாறி நடப்பேனென்று கனவிலும் நினைக்கவேண் டாம். தாங்களும் இனிமேல் அடிக்கடி பற்பல எண்ணங்களை நினைந்து மனதைசிதறவிடாமல் தைரியத்துடனிருந்து மேல்நடக்கும் விஷயங்களைப்பற்றி கவனஞ்செய்ய வேண்டுவது முக்கியமென்று நினைக்கிறேன்.

பெண்:—ஆகா அவ்விதஞ்செய்வதற்கு நானும் சித்தமாக இருக் கிறேன். ஆனால் அதுவும் என்னாலன்று உன்னாலாகவேண்டியதே. நீ வந்தது முதல் இதுவரையில் உனனுடைய ஊர் பெயர் குலம் யிவை களை விசாரிக்க மறந்துவிட்டேன். அதிலும் எனக்குன வரலாறு அவசியமானதால் தயைகூர்ந்து தெரிவிக்க வேண்டுகின்றேன்.

வந்தவள்:—நம் விருத்தாந்தங்களைப்பற்றி இப்பொழுது பேச வேண்டுமானால் காலதாமதம் ஆகுவதுமன்னியில் நான வந்தும் ரொம்ப நாழிகையாகிறது. வந்தகாரியமும் பார்க்கவேண்டியதாயிருக் கிறது. வந்த காரியமும் பார்க்கவேண்டியதாயிருக்கிறதை முன் னிட்டு அவ்விடத்திற்கும் சீக்கிரம் போகவேண்டும். நிற்க இந்த யிடத்தில் நாம் அதிக நேரம் தங்கவோ பெயர் வரலாறு முதலான விஷயங்களை சொல்லவோ கூடாது. ஏனென்றால் இங்கு இருக்கக் கூடியவர்களெல்லாம் கொலைபாதகத்திற்கு அஞ்சாத பரம சண்டா ளர்கள். அவர்களால் நமக்கேதேனும் தீங்குகள் நேர்ந்தாலும் நேரும் ஆனதாலென்று நிறுத்தி அவள் காதினிடமாக நான் வந்தவழியை காண்பிக்கிறேன் வாவென்று ரகசியமாய் சொன்னாள். உடனே யிருவருமாய் கீழ்த்திசையை நோக்கிச் சென்றார்கள். கொஞ்சதூரஞ் சென்றதும் ஓரிடத்தில் நின்று கெகண்டு இந்தயிடந்தான் நானவரும்

வழி யென்று சொல்லிக்கொண்டே காலினால் தரையில் மிதித்தாள் இவள் மிதித்தவுடன் பூமிக் குள்ளாக மணிச்சத்தம் கேட்டது அந்த நிமிஷமே பூமியின் பிளவுபோல் பெரியதான துவாரமொன்று காணப்பட்டது. அதில் கீழிறங்கி செல்வதற்கு படிகட்டுகள் கட்டப்பட்டிருந்ததுடன் உள்ளுக்கு சுரங்க மாதிரிப் புலப்பட்டது அந்த சுரங்கத்திலும் பட்டபகல்போல் எங்கு பார்த்தாலும் தீபமயமாயிருந்தது. அதற்குள்ளிருந்து ஓர் வெள்ளை ஸ்திரீவந்தாள். அவளிடம் முன் சென்றவர்களில் ஒருத்தியாகிய கிழமாது கீழிருந்து வந்தவளை நோக்கி அம்மா நாளைபதினம் இம்மாதானவள் இவ்விடத்தில் வந்து நிற்பாள், அவளை நீங்கள் தயாராய் காத்திருந்து வரவேற்று அழைத்து செல்லுங்களென்று சொல்லி இம்மாதையும் நோக்கி நான் முன்சொன்னபடி வந்தீர்களானால் எல்லா விஷயங்களும் பேசிகொள்வோமென்று சுரங்கத்துக்குள் வெள்ளை ஸ்திரீயும் அவளும் இறங்கி விட்டார்கள். இவளும் தான் முன்னிருந்த இடத்தைநோக்கி வந்துகொண்டிருந்தாள். (இன்னும் வரும்.)

நா. சுப சாமிநாத உபாத்தியாயர்,
பக்தகவி ஜோதிடர், மாந்தலே, பர்மா.

## நமது பெண்களின் கடமை.

சகோதரிகளே! நம் நாட்டில் அநேகர் கல்வி கற்காமலிருப்பது பெருங்குறை. ஆனால் கல்வி கற்றவர்களில் பெரும்பாலர் மேனாட்டு நடையுடை பாவனையை அனுசரிக்கிறார்களே யொழிய நம் மூதாட்டியார் கைக்கொண்டபடி அனுசரிக்காமல் நின்றுவிடுவது பெருந் தடுமாற்றம். அதை மாற்ற இறைவனை நாம் வேண்டுவோமாக.

விவாஹமானபின் புருஷர் பெண்களின் அகத்திற்கு போகிறது அவ்வளவு சாஸ்திர யிருக்கலாமேனும் அவர்கள் படும்பாட்டை வரையவேண்டியதில்லை. எல்லாம்தெரிந்தவிஷயமே என்று இத்துடன் விடுத்தனம். ஆனால் பெண்கள் ஆடவருடைய இல்லத்திற்கு ஏகுவது சாதாரண வழக்கமே. புருஷருடைய பாதுகாப்பிலிருந்தும் தன் மாமி மாமன் இருவரையும் தன் தாய் தந்தை என்று கருதி அவர்களுக்குப் பணிவிடைசெய்து கொள்ளவேண்டியது முக்கிய கடமை. குலமங்கையராக இருக்கவிரும்பும் பெண்கள் தன் கணவன் வெளியிலிருந்து வரும்பொழுது எதிர் கொண்டழைத்தல் அவனோடு பேசும்போது அடங்கிப்பேசுதல், "பெண்டிர்க் கழகு எதிர் பேசாதிருத்தல்" என்று மூதாதையார் கூறியபடி நடந்துகொள்ள வேண்டியது. தன் புருஷன் வரவிற்குத்தக்கபடி செலவு செய்துவர வேண்டும். மிதமிஞ்சிச் செலவு செய்கிறது பின்னால் ஆபத்துக்குள்ளாக்கும். தன்புருஷனுக்குத்தெரியாது பணம் சேர்த்து வைக்கக்

கூடாது. தன் புருஷனுக்குத் தெரியாமல் சீட்டுப்போடுதல், லேவாதேவி செய்தல் முதலிய கெட்ட வழக்கங்களை கையாடக்கூடாது. தன் புருஷனுடைய அனுமதியின்றி ஈன்றோர் உடன் பிறந்தாரை தன் இல்லத்திற்கு வரவழைத்தலும், பொருளுதவி செய்தலும் கூடாது. தன் கணவன் அனுமதியின்றி தன் தாய்வீடு ஏகுதல் கூடாது. தன் கணவன் அயலூர் சென்றிருக்கும்பொழுது அவனில்லாத காலத்தில் தன்னை யலங்கரித்துக்கொள்ளுதலும் சங்கீதம்பாடுதலும் தகாத காரியம். தன் ஆடவனின் அனுமதியின்றி அயல்மனை ஏகுதல் கூடாதகாரியம். வியாக்கியானம் உரைக்கிறதுதீயவழக்கம் தனபுருஷனுடன் பேசும்பொழுது அவன் பாதங்களிலேயே பார்வையை செலுத்துதலும், ஆசனங்கொடுத்து உபசரித்தல், அவனுக்குத்தானே பணிவிடைசெய்தல், அவன் தூங்கிய பிறகுதான்சயனித்தல் அவன் எழுந்திருப்பதற்கு முன் தான் படுக்கைவிட்டு எழுந்திருத்தல்முதலியவற்றைக் கையாடவேண்டும். பெண்கள் சரீரத்தின் அவயவங்களை நன்றாய்த் தேய்த்து ஸ்நானஞ்செய்யாமை, அழுக்கடைந்த உடைதரித்தல், நெற்றியில் திலகமிலலாமலும், சந்தனம, புஷ்பம் அணியாமலும் உரக்கப்பேசுதலும், காரணமின்றி நகைத்தலும், புருஷர்களுடைய முன்னிலையில் கூட்டங்கூடுதலும், தலைமயிரை வாரிக்கொள்ளாமலும் கற்பில்லாத பெண்களோடு சேர்தலும் கூடாது

தன் கணவன் ஒரு வேளை கோபித்து வைதாலும், பதில் சொல்லக்கூடாது. தன் சேவக ஜனங்களிடம் அன்புள்ளவளா யிருக்கவேண்டும். ஸ்திரீகள் தங்கள் கணவன் செல்வனாயிருந்தாலும், வரியனாயிருந்தாலும், திடகாத்திரனாயிருந்தாலும், நோயாளியாயிருந்தாலும், நல்லொழுக்க முள்ளவனா யிருந்தாலும், புல்லொழுக்க முள்ளவனாயிருந்தாலும. அறிவாளியாயிருந்தாலும், மூடனாயிருந்தாலும், லக்ஷண புருஷனாயிருந்தாலும், அவலக்ஷணமுள்ளவனாயிருந்தாலும், எப்படி இருந்தாலும், அவனைத் தெய்வமாகப் பாவித்து அவனிடம் விசுவாசம் வைத்து, அவனை மகிழ்விக்க வேண்டும. அவ்விதமில்லாத பெண்கள் குலத்தைக் கெடுக்கவந்த கோடரியாவார்கள்.

A. S. T. மஹாராஜ், யூனியன் போர்டு ஆபீஸ், சுரண்டை.

---

## முதற்பாவம்

இப்பூவுலகில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சகலமான ஜீவ ஜெந்துக்களைக் காட்டிலும் மனிதனே மேலான பிறவியென நாம் அறிகிறோம். இவ்வாறு சகல ஜீவஜெந்துக்களைக்காட்டிலும் மனிதன் எவ்வாறு மேன்மையுடையவனென சிலர் கருதக்கூடும். எவ்வாறெனின், சகல ஜீவஜெந்துக்களிலும் மனிதனுக்கு பகுத்தறிவும் நன்மை தீமைகளை கண்டறியக்கூடிய ஆற்றலும் கடவுள் அளித்திருக்கிறார்.

மேல்கண்டவைகளினாலே மேன்மையுடையவனென நம்பலாம். இவ்வாறு பகுத்தறிவுடைய மனிதன் சிறிதும் யோசனையின்றி கடவுளுக்கு விரோதமாகசெய்யும் ஒவ்வொரு செய்கைகளும் பாபமாகும்.

உதாரணமாக, நம் நாட்டில் மனிதர்களால் செய்யப்படும் செய்கைகளையே நாம் இவ்விடத்தில் எழுதுவோம். நந்தமிழ் நாட்டிலுள்ள பெண்மணிகளுக்கு (பேய்) பிசாசு பிடித்துக்கொள்ளுகிறதென்றும் பூசாரிகளைக்கொண்டு அதற்கு சில செய்கைகள் நடத்துகிறார்கள் பூசாரிகளோவெனின், தாங்கள் கடவுள் என்றும் போக்கிரித்தனமாக நடந்துகொள்ளுகிறார்கள். மனிதனே கடவுளாகயிருந்தால் கடவுள் ஒருவர் இவர்களையேன் சிருஷ்டிக்கிறார். இவர்களே எல்லா அதிகாரத்தையும் வகித்து வாலாமன்றோ? சில மூடர்கள் ஆபாசமான பழக்கங்களைச்செய்து உண்மையான கடவுளுக்குக் கோபத்தை உண்டாக்கி மீளாநரகத்திற்கும் ஆளாகின்றார்கள். இவர்களுடைய துன்மதியை என்னவென்றியம்பலாம். மேல்கண்ட செய்கைகளை நீக்கி நற்குணத்தினையும் மேன்மையையும் அடைய முயலுவார்களாக.

வை. முத்தையா பிள்ளை, சேருகுடி.

## சிவபெருமானது இருபத்தைந்து திருமூர்த்தங்களது வணக்கம்.

குறள் வெண்பாக்கள்.

1. இலிங்கோத்பவமூர்த்தி.

கலங்கும் மனதைக் கடந்தோர் பணியும்
இலிங்கோத் பவனையே எத்து.

2. சுகாஸனர்.

துன்பம் விலக்கும் சுகா அ ஸனமூர்த்தி
இன்பத் திருஉருவம் ஏத்து.

3. உமாஸகர்.

உமையை மணந்த உமாஸகனைப் போற்றின்
அமையும் சுகவாழ்வோ டன்பு

4. கலியாணசுந்தரர்.

நலியாத வாழ்வடையு நாட்டமுண்டேல் போற்றாய்
கலியாண சுந்தரன்செங் கால்

5. அர்த்தநாரீஸ்வரர்.

அரைப்பங் குமைக் களித்த அர்த்தநாரீசன்
குரைகழற்கால் உன்மனத்தே கொள்

6 சோமாஸ்காந்தர்.

மாமாயி யோடு மகன்முருக னைவைத்த
சோமாஸ்காந் தர்தாள் துணை

7. சக்ரப்ரதான மூர்த்தி.

ஆழியோற் காழி அளித்த அமலனை
வாழிஎனச் சொல்வமு வந்து

8. திரிமூர்த்தி.

அரன்அயன்மால் ஆய்நின் றருள்திரி மூர்த்தி
உருவினையே நெஞ்சகத்துள் ஓர்

9. கேசவார்த்தம் அல்லது அர்த்தாங்க விஷ்ணு.

அரையுடலை மாற்களிக்கும் அர்த்தாங்க விஷ்ணு
இருவினை யறுத்தாள் வானே

10. தக்ஷிணாமூர்த்தி.

தென்முகமாய் வீற்றிருந்து சின்முத்தி ரைகாட்டும்
சின்மயனே ஈசனெனத் தேர்

11. பிக்ஷாடனமூர்த்தி

கைஓடொன் றேந்திஐயம் கேட்கும் கருணைவள்ளால்
ஐயா! தஞ் சம்முன் அடி

12 கங்காளமூர்த்தி

வெங்காளம் உண்டான் விரைக்கொன்றை யான்காப்பு
கங்காள மூர்த்தி கழல்

13. காமஸம்ஹாரர்.

காமன் பொடியாகக் கண்திறந்த காமாரி!
மாமன்னா! தாதாள் மலர்.

14. கால ஸம்ஹாரர்.

காலனைச் செற்ற நதிர்சூல பாணி! எந்தக்
காலமும்உன் னைத்தொழுவேன் காண்

15. சலந்தர ஸம்ஹாரர்.

சலந்தரனைச் சக்கிரத்தாற் கொன்றவனை முத்திப்
பலன்தருவோன் தன்னைநீ பாடு

16. திரிபுர ஸம்ஹார மூர்த்தி.

புரமூன் றெரித்தான்தன் புன்னகையால் எங்கள்
சிரமூன் றும் அன்னோன்தாள் சேர்ந்து

17. சரப மூர்த்தி.

நாரசிங்கனைத் தடிந்த நற்சிம்புள் ஆனவனும்
வீரச் சரபனை வேண்டு

18. நீலகண்டர்.

ஆலம் உண்டான் முன்னாள் அமரர் அறைகூவ
நீலகண்டன் என்போம் நினைந்து

19. திரிபாதர்.

மூக்கால்கை ஏழு மூதுகழுத்தி ரண்டொருநாள்
கொக்கும் மருப்பானை உன்னு

20. ஏகபாத மூர்த்தி.

எங்கும் பரந்திருக்கும் ஏகபாதன் ஞானம்
மங்காமல் ஈவன் மகிழ்ந்து

21. பைரவர்.

ஆழ்த்தும் பவபந்தம் அண்டாதே காத்திடுவான்
வாழ்த்தும் வயிரவன்முன் வந்து

22. விருஷபாரூடர்.

இடபத்தில் ஏறும் இறைவன்தன் பாதம்
மடம்வைத்த நெஞ்சே வழுத்து

23. சந்திரசேகரர்.

இந்திரபோ கம்வேண்டாம் ஏயும் பிறப்பறுக்கும்
சந்திர சேகரன் தாள்

24. நடராஜமூர்த்தி.

கடவாத பந்தக் கலவி அறுத்திடும்
நடராஜ! தந்திடுஞா னம்

25. கங்காதரர்.

மங்காத ஆனந்த வாரிதியி லேகிடப்பர்
கங்கா தரனைச் சேர்வார்.

கி. வா. ஜெகந்நாதன், மோகனூர்.

## பெரியோர்களின் உபதேசம்.

1 நியாயத்தைக் கடைபிடித்தொழுகு. எப்பொழுதும் உண்மை பேசு. உன் கடமையைச் செய்துவருகையில் மரணம் நேரிடினும் அதைரியமடையாதே. பிறரிடம் அடிமைபோல் நடக்காதே உன் தேசநன்மைக்காக உழை (தயானந்த சரஸ்வதி)

2 மனிதன் அடையும் சுகதுக்கங்களுக்குக் காரணம் அவனவனுடைய எண்ணம், செயல், இச்சைகளே. விதியை ஆக்குவதும் நீக்குவதும் மனிதனே. (கன்ப்யூயஸ்.)

3 கீர்த்தியைக் காப்பாற்றிக்கொள். அதுவே உத்தமமான பலம். கீர்த்தியை போக்கிக்கொண்டவன் ஜீவனோடிருந்தாலும் பிரயோஜனமற்றவனென்று சொல்லப்பட்டிருக்கிறது. (வியாஸர்)

4 ஐஸ்வர்யத்தை பெரிய பாரமாக நினைக்கவேண்டாம்: ஐஸ்வர்யத்தைச் சரியாக உபயோகிக்காவிடில் பின்னர் கஷ்டங்களை அநுபவிக்க நேரிடும். (ஆர்டன்)

5 ஐஸ்வர்யமென்பது அளவுகடந்த உலகப்பொருட்களை ஈட்டுவதால் ஒன்றும் உண்டாவதில்லை. ஆனால் போதுமென்று திருப்தியடைந்த பூரணமனந்தான் அந்த ஐஸ்வரியமாகும்.
(நாயகவாக்கியம்)

6 பலியிடுவதைப் பார்க்கிலும் நீதியும் நியாயமும் செய்வதே கடவுளுக்குப் பிரியம். தூக்கத்தை விரும்பாதே. விரும்பினால் தரித்திரனாவாய். கண்விழித்திரு அப்பொழுது ஆகாரத்தினால் போஷிக்கப் படுவாய். (சாலமோன்ஞானி)

7 காலதாமதமும், மறதியும், சோம்பலும், தூங்கிவிழுதலும் ஆகிய நான்கு கெடுதியென்ற தீவிற்குப்போக விரும்புவோர் ஏறும் கப்பல்களாகும் ஆதலால் அஜாக்கிரதையாயிராதே. அதனால் எதிர்பார்த்த நன்மையை யிழப்பதல்லாமல் பேதமைப்பட்டமும் அடைவாய். (திருவள்ளுவர்)

7 செல்வம் பெற்றபொழுதே தருமம் செய்யக்கடவாய். மனவெழுச்சியில்லாதவர் மதிப்படையார். (திருவள்ளுவர்)

9 நீ உன்னுடைய தேசத்திற்குப் பயன்படத்தக்க புருஷனாகக் கடவாய். அப்படியாகாதவன் இருப்பதைக்காட்டிலும், இறப்பது நன்று. (தாவத்சுல்தான் சாயபு)

10 கெட்ட எண்ணங்களுக்கு மனதில் இடங்கொடாதே. அவை உட்புகுந்தால் உடனே ஓட்டிவிடு. எப்படியெனில் மனதில் தோன்றும். ஓர் தீய எண்ணத்திற்கு நேர்விரோதமானதோர் நல்லெண்ணத்தால் முன்சொன்னதை மாற்று. (அனிபெஸண்டு)

11 பிறர் உனக்கு எவ்வெவ்வித நன்மைகள் செய்யவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அவ்வவ்வித நன்மைகளை அவர்களுக்கு நீ செய்வாயாக. (இயேசுநாதர்)

12 எவ்வுயிர்களுக்கும் ஒருவித சங்கடமும் செய்யாமலிருப்பதே எல்லாவற்றாலும்மேலான தர்மம். (வர்த்தமானமஹாவீரர்)

13 உலகிலுள்ள ஏழைகளுக்கு உண்டியளிக்குமாறு ஒருவரையொருவர் தூண்டுவதில்லை. அவ்வாறு செய்யாததால் நீங்கள் ஏழைகளின் உரிமையைப் புசித்துவிடுகிறீர்கள். (குர்ஆன்)

14 சொந்த பந்துக்களாயினும் உடன்பிறந்தாராயினும் அன்னியர்களாயினும் அன்பானது மனங்கலந்த விடத்தையே நாடும்.
(இராமாநுஜலு நாயுடு)

15 ஒருவனுடைய நிழலானது நெடுந்தூரம் போயினும் அவனை விடாது அவனிடத்தே தங்குவதுபோல் ஒருவன் பிறருக்குக் கெடுதி செய்தால் அது அவனைத்தொடர்ந்து செல்லும். (கிருஷ்ணசாமிஐயர்)

சே. ஆர். கணபதி பிள்ளை, சுண்டக்காமுத்தூர்.

## இரஞ்சிதனின் நன்றி.

நம்மது தேசங்களின் விசிட்டநிலையைக்கோரிப் பற்பல பத்திரிகைகள் எங்கனும் செறிந்து வருகின்றனவெனினும் இரஞ்சிதனையே எக்கடிகையிலும் நலம் பாராட்டும் நெறியுடையராய் இருக்கின்றோம். ஏதுக்கெனின், ஆதியிலேயே இரஞ்சிதன் தனது நிறையை விரும்பாது பொதுநலங்கருதி, குறைந்தசந்தாவாய், அதாவது 14 அணுவுக்கு, பன்னிருதிங்களும் நம்மனோர்பாற் புகுந்து, இனிய சரிதபாவாம்ஸத்தை யளித்துப் பாலசசியைப்போல், தினந்தோறும் உருவத்தாலும், அறிவாலும், எத்தகையரும் வியப்புற்று அகமகிழுமாறு வளர்ந்துலவுகின்றானே. இத்தகையோனையும் சந்தாவையும் ஒப்பிடும்போது, சந்தாப்பணமோ அன்னவரின் மூன்றிலோர் பகுதிக்கேனு மாற்றலுடைத்தன்று.

இச்செயன்முறையானன்றோ நாமெல்லீரும் இரஞ்சிதனுக்கு அரும்பெருநன்றி செலுத்த வேண்டியவர்களாகவுள்ளோ மென்றனம். இஃதிற் சந்தேகந்தானென்னை?

"சொல்லாமலே பெரியர் சொல்லிச் சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவர்—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாட்டிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்"

என வான்றோரால் கூறியுள்ள செய்யுளிற் றோன்றும், பெரியாரின் குணத்தினை யொப்ப நிகழ்கின்றானென்பது நேயர்களனைவருமறிந்த விஷயம்.

இங்ஙனம் பேர்நன்றி செலுத்தும் இரஞ்சிதவித்தகன் தனது ஆற்றலையும், ஆற்றலின்மையையும் தானாகவே யெடுத்துரைக்குங்கால் ஏதும் உதவி புரிவோமென நாமனைவரும் இலவுகாத்தகத்தைப்போல் எதிர்பார்த்திருப்பதிற் பயனின்றாம்.

யாதெனில் அறிஞரிலக்கணம் மருவ, இரஞ்சிதவித்தகன் சிலகால் தம்மாட்டுத்தோன்றும், தீமையை ஏனையோர்க்கெடுத்தியம்பி தனது மாசினை நீத்துவானேயன்றித் தனது நற்செயலைப் பிறர்

வியந்து புகழுமாறு தன்னூரு வழிகாலமெய்தினும் புகட்டவே மாட்டானென்பது திண்ணம்.

> " எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் இல்லைச்
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் தமது தமிழ்வேதத்திற் புகன்றுளார். அதாவது ஒருவன் எவ்வித தீயசெய்கையைச் செய்துளோனாயினும் அதனைப் பின்னர் அது அதற்கெனக் குறித்த பிராயச்சித்த விதியினால் தீர்த்துக்கொள்ளலாம். ஆனால் செய்ந்நன்றியை மறந்துளோருக்கு; அறவே பிராயச்சித்தமில்லையென்பதேயாம்.

ஆகவே இன்னோரன்ன நன்றியையும் அதனையளித்த, அளிக்கிற இரஞ்சிதவித்தகனையும் ஓர்கிமிடமேனும் மறப்போமாயின் அனைவரும் நரகிடைப்புகுந்து ஆற்றலின்றி வருந்துவதற் காளாவோம்.

மேலும் சென்ற திங்கட்சஞ்சிகையிலும் அருமைவாய்ந்த நண்பர் ஸ்ரீமான் ராமச்சந்திர நாயுடு அவர்களும் இங்நோக்கமாகவே வரைந்துள்ளார். ஆதலால் சகோதரர்கள் யாவரும் எதிர்வருட தொடக்கமாகப் புதிய சந்தாதாரரைச் சேர்த்துக் கொடுப்பதோடு வருட சந்தாத்தொகையையும் இன்னும் 16 சதமேற்றிஒரு ரூபாவாக அளித்து வரவேண்டுமென மிக்க விநயத்துடன் வேண்டுகின்றோம். யாமும் அப்படியேஎதிர் பார்த்திருக்கின்றோம்.

இரஞ்சித வித்தகன் நீடூழி வாழ்க!

அறுமுகப்பிரான் அருள் சுரப்பாராக!! சுபம்.

சந்தா நெ. 153 கு. வே. தம்பையா, ஆசிரியர்,
தேவரையாழிச் சைவவித்தியாலயம், அல்வை தெற்கு, பருத்தித்துறை.

## விண்ணப்பம்

எனது அன்புமிக்க ரஞ்சிதனே, சென்ற துந்துபி௵ மாசிமீ சென்னைநகரில் (ஆழ்ந்த கிணற்று ஜலத்தில் கதிரவன் தன ஒளிகளைப் பரப்பிக்கொண்டு உதயமானாற்போல்) "ரஞ்சிதன்" என்ற புனைபெயருடன் தோன்றி நினது ஆரம்பமுதற்கொண்டு பத்தொன்பது திங்களும் கடந்து இருபதாம் திங்களிலிருந்து விஷயங்களிலும் அச்சுப் பதிப்பிலும் மேலுரையிலும் கம்பீரமான தோற்றத்துடனும் வெளிவந்துலாவுகின்றாய் என்பது நமது நேயர்கள் யாவர்க்கும் வெள்ளிடைமலைபோல் தெரியவரும். ரஞ்சிதா! நின் புன்மொழிகளாகிய மழலைச் சொற்களைக்கேட்டு களிப்பெய்தாதவரெவர்! நினது விஷயங்களில் ஈடுபடாதவர் துர் அதிர்ஷ்ட முடையவர்களென நாம் சந்தேகமின்றி கூறலாம் நினது தொகுதி 3-வது ஆண்டு ஆரம்பிக்குங்கால் எனது நேயர்களையும் உனக்கு சந்தாதாரராக சேருபடி சிபார்சு செய்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

வை. முத்தையா பிள்ளை, சேருகுடி.

## கடிதம்

என் ஆருயிர் இரஞ்சிதனே,

அரசனானவன் ஒரு தேசத்திற்கு அல்லது இரண்டுதேசத்திற்கு அரசனாய் இருக்கிறான். ஆனால் நீ இந்த உலகத்துக்கெல்லாம் ஏகச் சக்ரவர்த்தியாய் விளங்கவேண்டும் என்று என் மனதார தோத்திரம் செய்கிறேன். என்னால் கூடியமட்டும் அடுத்த வருடம் சந்தாதாரர் களை சேர்த்து அனுப்புகிறேன். பக்கத்து ஊரில் எல்லாம் உன்னுடைய மேன்மையைப்பற்றி தெரிவித்திருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் சந்தாதாரராய் சேர்ந்து விடுவார்களென்று நான் நினைக்கிறேன். உலகமே அழிந்துவிட்டபோதிலும் உன் வாழ்வு அழியாமல் கடவுள் காப்பாராக.

என் சிற்றறிவுக்கு எட்டியவாறு தந்தைதாய்ப்பேண் என்னும் ஒரு சிறு வியாசத்தை எழுதியுள்ளேன் அதில் ஏதாவது பிழை ஏற்படின் அவற்றை திருத்தி வருகிற மாதப் பத்திரிகையில் பிரசுரம் செய்வாய் என்று யான் நினைக்கிறேன்,

இப்படிக்கு

எ. சோமசுந்தரம், வத்லகுண்டு.

## அபிப்பிராயம்

குறளாற் குறளைக் குவலயத்திற் போக்கி
அருளாய நூலை அகங்கை— மருளாமல்
கொண்டு நடத்துங் குணவான் ஒருவனால்
உண்டுடுத்தி வாழ்வோம் உணர்.

எஸ். ஆதிநாராயணன் பிள்ளை,
உபாத்தியாயர், ஆனைமலை.

## இரஞ்சிதன் நண்பர்களுக்கோர் விஞ்ஞாபனம்.

எனது அன்பும் பிரியமுமுள்ள "இரஞ்சிதன்" சந்தா நேயர்களாகிய சகோதர சகோதரிகளே! பூமண்டலத்தில் மானிடர்களாய்ப் பிறந்த நாம் எல்லோரும் அபிவிருத்தியடையவேண்டியது முக்கிய கடமை. அதற்கேற்ற கருவி என்னவென்றால் பத்திரிகை ஒன்றே. மேல்நாட்டார் பத்திரிகையினால் ஏற்பட்ட பயனால் அவர்கள் எந்த நிலைமையிலிருக்கிறார்கள் என்பது நண்பர்களுக்கு தெரிந்த விஷயம். அப்படியிருக்க நம் தமிழ் நாட்டுவாசிகள் "இரஞ்சிதபோதினி"க்கு இரண்டு ஆண்டுகளாகியும் ஆதரிப்பார் ஒருவருமில்லை. இன்னும் கவனமின்றி யிருந்தால் நாம் எல்லோரும் எப்படி அபிவிர்த்தியடைவோம். பத்திரிகைகளை முன்னுக்குக் கொண்டுவருவது சகோதர சகோதரிகளைப் பொருத்ததாகும். நமது "பாலசந்திரனுக்கு ஒப்பான இரஞ்சித போதினி"க்கு மூன்றும் ஆண்டு பிறக்கப்

போகிறது. இதுவரையில் இரஞ்சித ரத்னத்தை ஆதரித்து வந்தது போல மேலும் ஆதரித்து நமது சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் ஒரு புதிய சநதா தாரரைச் சேர்த்து இரஞ்சிதபாலகனை ஆதரிக்க வேண்டுமென்று சந்தா நேயர்களை வணக்கமாய்க்கேட்டுக் கொள்ளுகிறேன், ஸ்ரீ கைலாச்வாசருடைய திருக்குமாரர் பாலசுப்ர்மணிய சுவாமிகள் துணைசெய்வாராக. சுபம்! ப, சுப்பய்யா தேவர், மதுரை.

---

## மாந்தரும் சட்டமும்

பண்டை நாட்களில் மாந்தர் சகலரும் யாதொரு இடுக்கணுமின்றி வாழ்ந்ததாய்ச் சரித்திரம் கூறுகிறது. ஆனால் தற்காலத்திலோ எவ்விடத்தை நோக்கினும், கொலை, களவு, விபசாரம் முதலிய இன்னோரன்ன மறச்செய்கை நிகழ்கின்றன வென்பது சகலரும் அறிந்ததேயாகும். முன்னாளில்மட்டும் அவ்வாறு அறச்செயல் நிகழ்ந்ததென்ன? தற்போது அவ்வாறு நிகழாது மறச்செய்கை மலிந்து கிடப்பது ஏன் என்பதை எவரேனும் சிந்தித்துள்ளாரா? இவ்வராட்சியில் நாம் பன்னாட்களாய் முயன்று பார்த்ததில் பலவேறுகாரணங்களிருப்பினும் முக்கியங்களிலொன்றாக ஞாயத்திற்கு எதிர்மாறாய் சட்டம் என்னும் சொல்லே யாகுமென அறியலாயினோம். ஞாயம் யாதென்பதை முதலில் ஆராய்வோம். ஒரு ஆடவன் பிரத்தியானுடைய மனைவியைக் கவர்ந்து கொண்டானென்று வைத்துக்கொள்வோம். அப்பெண்பாலும் அன்னவனிடமேயிருந்துகொள்ளச் சம்மதமாயிருக்கிறாள். ஆனால் அவளுடைய கணவன் அவள்மீது அளவிலா காதலுடையவனாயிருக்கிறான். உடனே நியாயஸ்தலத்தில் தன்னுடைய மனைவியைத்தனக்குச்சேர்த்து விடுமாறு பிராது தொடுக்கிறான். நியாதிபதி இவ்வழக்கை ஆரம்பிக்கிறார். எல்லாவற்றையும் விசாரித்த பின்னர், பெண்ணையும் உன்னுடைய நோக்கம் என்னவென்கிறார். அவள் தனது வைப்பாளன்மீது அதிகம் பிரியமுடையவளாகையால், தான் தன் புருடனிட மிருந்துகொள்ளச் சம்மதிக்க மறுக்கிறாள். இவ்வழக்கு என்னமுடிவாகுமென்பதை வாசகர்களே யோசிப்பீர்களாக, என்னவாகும் சட்டப்படி தன்புருடனிடமிருக்க மனமில்லாதவள் மற்றவன்மீது விருப்புற்றபடியால் அவனிடமேயிருப்பதற்கு உத்தரவாயிற்று. இதைத்தான் தற்கால சட்டமெனப்படுவது. ஆனால் தன் புருஷனைவிட்டு மறறவனை இச்சித்திடினும் தன்புருஷனிடமேயிருக்கும்படி கட்டளையிடுவதும், மற்றும் அவனுக்குப் பலபுத்திமதிகளைப் போதிப்பதுமன்றி தண்டனையும் விளைவிப்பதுமே நம் முன்னோராலும் கடவுளுக்குப் பிரியத்தை கொடுப்பதுமான ஞாயம் எனப்படும்.

சகோதரர்களே! இதைப்பற்றி விரிவாய் வரைய இன்னோர் சந்தர்ப்பம் நேரிடும் அப்பொழுது என்னாலன்றவை யெல்லாம் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன். வி. மு. பொன்னையா, மதுரை.

# மருந்துவாழ்மலை மகிமை

பூர்வீகராமாயண காவியத்தில் கூறிய அனுமாரால் கொண்டு வரப்பட்ட சஞ்சீவிமலை என்பதும் தென்னிந்தியா தெற்குமுனையின் கண்ணுள்ள கன்னியாகுமரியாத்திரை பக்தர்கள் கண்டு தெரிசித்துய்யுமாறு அதன் சமீபத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்தை சார்ந்ததில் விளங்கா நின்ற மருந்து வாழுமலையில் பரமார்த்தலிங்க சன்னிதானமும் பாருலகில் மானிடர்பாவத்தை நிவர்த்திபண்ணுந் தவப்பயனாக ஆகாயத்தினின்றொழுகுவதுபோலுள்ள அமிர்த சுனையும் அகஸ்திய முனிவர் தன்னையடுத்தவர்கள் அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை கொடுக்க அவதரித்தாபோலுள்ள யோகமண்டபமும் தெய்வேந்திரன் தவநிலை தெரிசனம்போலும் ஐராவதமென்ற யானையைய் கட்டிய இடமும் ஆங்காங்கு அமைந்திருக்கும் சுனைகளும் கண்டவர் மனதை கவரச்செய்யும் தீர்த்த மூர்த்தி விசேஷமும் வையகத்தின் மானிடர் மாதாந்த சுக்கிரவாரத்திலும் வருஷவிஷு புண்ணிய காலங்களிலும் வந்து சுனைநீராடி மகிழ்வுடன் தெரிசனமுஞ்செய்து வியாதிகள் நீங்கி சுகவாழ்வு பெறமூலிகையும் மனவருமையுடன் பரித்தாண்டும் வந்த அடியார்களுக்கு அமுதளித்து தானுமுண்டு வருகிறார்கள் மலையின் சாமி யாறென்றதைக்கு கருங்குளம் வன்னியப் பெருமாளாசாரியை 1008 வேல் பூரி சந்தனகாவடி எடுத்து செலுத்த பரமார்த்தலிங்கர் கனவில் சொல்லியதாயும் அதை அவர் குடும்பத்தார் 3 தடவல்களாக எடுக்க உத்திரவு கேட்டு கொண்டபடி உத்திரவு கொடுத்ததாயும் அதன்பேரில் 1100 ௵ ஆவணி மாதாந்த சுக்கிர வாரத்தில் 11 வேல் பூரி முதல் காவடி பரமார்த்தலிங்கத்துக்கு அற்புதமாக செலுத்தினர் இரண்டாவது காவடி மூத்திரை தரித்து கோம்பை மகான் தெரிசனஞ்செய்து 337 வேலபூரி அற்பிசி மாதாந்த சுக்கிர வாரத்தில் சந்தனாபிஷேகம் கட்டிய காவடியுடன் மலையையடுத்த சமயம் வந்த ஜனங்கள் கூட்டமிருந்த வைபவமும் இவர்கள் மழையா விடஞ்சல்படாமல் காவடி கண்டு ஆனந்திக்கும்படி அதற்கு வயர் லாங்கப்பால் சுத்தி பெருமழை பெய்யவும் தன்னிடங்கள் போய்ச் சேரமழை வெரிவானதும் பரமார்த்தலிங்க மூர்த்தியின் அற்புத செயலை யாரால் வர்ணிக்ககூடும் ஷை காவடியின் அருளுடன் மீதியுள்ள வேலப்பூரி மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய கடவுளுக்கு ஆசாரியால் தை மாதாந்த சுக்கிரவாரத்தில் காவடி செலுத்தசேவனுமென்று வுத்திரவு செய்தபடி நடைபெறவேர வழை பார்த்து மகிழும்படி பரமார்த்தலிங்க மூர்த்தி ஜனங்கள் பேரில் மேலும் கிருபை புரிவாராக ஷை மலையின் விசேஷங்களை ஜனங்கள் வந்து தெரிசித்து பலனடையும் வண்ணம் இதனை இரஞ்சிதன் வாயிலாய் வெளியிட்டேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

K. A. Subramaniyer, Terkku Karunkulam.

# சுலோசனை.

(159-ம் பக்கத்தொடர்ச்சி)

மூன்றாவது அங்கம் — முதலாவது காட்சி

காலம்: முற்பகல்
இடம்: போர்க்களம்
பாத்திரங்கள்: லக்ஷ்மணன், விபீஷணன், மாருதி, ஜாம்புவான், அங்கதன் முதலாயினோர்.

ல:—மித்ர, விபீஷணா! எங்கோ போயொளித்தனன்! பாவி! மகாமாயாவி! வஞ்சகன்! எங்கு போந்தொளிந்தனன்! சத்ருவைக்கண்டன்றோ பாணப்பிரயோகம் பண்ணவேண்டும். நம்மால் விடுக்கப்பட்ட ஐந்திராஸ்திரமும் இந்த அம்புப்பெட்டியில் வந்து நுழைந்துவிட்டதே.

வி:—வஞ்சனையே குடிகொண்டவன், மறைந்தொளிவான் என்று கூறினேனே!

மா:—ஆம். அவன் வஞ்சகத்தை அசோகவன மழிக்குங்கால் கண்டுளேன் என்றாலும், அங்கதன் முதலாயினோராலும் எறியப்பட்ட குன்றுகள், பெரிய பாறைகள் எல்லாம் தவிடுபொடியாக்கினனே!

வி:—லக்ஷ்மணா! ஏதோ ஆரவாரம், பெருங்கும்பல்! ஓகோ அதோ பாருங்கள்! நான்கு புரவிப்பூட்டிய ரதமொன்று நண்கட்கு புலப்படுகின்றதே!

மா:—ஏராளமான இராக்ஷதப்படைகளுடைய ஆரவாரந்தான்!

அ:—வானரர்காள் இராக்ஷதசைன்யம் சமீபத்தில் நெருங்குகின்றது; ஊக்கத்துடன் நின்று போர்புரிய வேண்டும். அவர்களைச் சிதறவிடாமல் போய்ச் சூழ்ந்துகொள்ளுங்கள்.

வ:—ரதஞ்சமீபத்தில் வருகின்றது. நவீனகவசம் பூண்டு, வேறு சாரதியால் நடத்தப்பட்டும் இதோ (சுட்டிக்காட்டிக்கொண்டு) நமக்கெதிரில் வரும் அந்தரதத்தில் கெம்பீரமான பார்வையுடன் வீற்றிருப்பவன் மேகநாதன் (இந்த்ரஜித்) தானோ!

வி:—ஆம், ஆம்! அந்த திருடனே தான்! இந்த்ரநீலக்கற்களின் சமூகம்போல் பிரகாசிக்கின்றான் பாருங்கள். மாயையின் வலிமை நம்மை ஏமாற்றித் திருடனைப்போல் மறைந்தனன், நகர் சென்று இக்கோலங்கொண்டு மீண்டும் நம்மை யெதிர்த்து யுத்தஞ்செய்யுமாறு வந்திருக்கின்றனன்! லக்ஷ்மணா! எச்சரிக்கையுடனிருந்து சமயமறிந்து கொல்லவேண்டும் துஷ்டனை

ல:—மிகுந்த பயங்கரமாய்க் காணப்படுகின்றனனே! வீராவேசமோ! இதோ பாருங்கள், (வில்லைக்காட்டிக்கொண்டு) இந்த வில்லில் அதிதீக்ஷ்ண்யமான பாணங்களைத் தொடுத்து விடுகின்றேன்.

(அம்புகளை எய்கிறார்)

வி:—க்ஷணத்துக்கு க்ஷணம் ரூபம்மாறி காணப்படுவான்; எச்சரிக்கையுடன் காரியத்தை முடிக்கவேண்டும். (சைன்யங்களைநோக்கி) வாநரர்காள்! ஜாக்கிரதை ஜாக்கிரதை!

மே:—(ராமாநுஜனை நோக்கி) அட லக்ஷ்மணா! உன்னாலானதைப் பார். நீ விடுத்த அம்புகளைத் துண்டித்துவிட்டேன். இந்த கொடிய வாநரர்கள் போடும் மலைகளும், கட்டிகளும், மரங்களும் என்னை என்ன செய்யுமடா? (புருவம் நெறிக்க, உதடு துடிக்க) அவைகள் எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கியன்றோ மற்றோரிடத்தில் மணல் குவியலாய்க்குவித்திருக்கின்றேன். நீயோ கேவலமான நரன்; நின்படைகளோ வாநரர்கள். என்னுடைய வீரதீரபராக்கிரமங்களைக் கொஞ்சமும் எண்ணிக்கூட பாராமல் சமருக்கே வந்தனையோ! சபாஷ்!

ல:—(எதிரியின் கைலாகவத்தைக் கண்டாச்சரியமுற்று) அடா துஷ்டா! எங்கொளிந்துகொண்டனை! புறங்காட்டியோடுதல் தர்மயுத்தமோ! நின்மாயைகள் இனி வெல்லாது, வெல்லாது. (படபடத்து) அடா துஷ்ட ராக்ஷதப்பதரே! ஈரேழுலகங்களில், இந்த அண்டபகிரண்டங்களில் நீபோய் எங்கு மறைந்தாலும்சரி, நின்உயிர் வாங்கும்படியான திவ்யாஸ்திரப்பிரயோகஞ்செய்து, நின்னை நொடிக்குள்ளாக கொல்லுகிறேன், பார்!

மே:—அற்ப மானிடப்பதரே! (பரிகாசமாய் எசிக்காட்டிக் கொண்டபடி) உனக்குப் பயந்துபோய் ஒளிந்துகொண்டேனோ! சபாஷ்! புறங்காட்டி நகர்போயினேனென்றெண்ணினை போலும்; சபாஷ்! நீ, ஏமாந்து என்னைக்காணாமல் வருந்தினதெல்லாம் நானறிவேன், அறிவேன்! (மீசையை முறுக்கிக்கொண்டு) இதோ, பாரடா! ஆயிரங்கணைகளை சரமாரியாய் விடுகின்றேன்.

ல:—(வாநரர்களில் சிலர் அவன்விடுக்கும் பாணங்கள்வந்து வீழ்வதினால் தன்பஞ்சசிக்கமாட்டாமல் வருந்துகிறவர்களைத் தேற்றியும்) நின்னாயிரங்கணைகள் என்னசெய்யுமென்று நினைக்கின்றனை; இதோ அவைகளைத் துண்டித்தேன். இந்த ஐந்து அஸ்திரங்கட்கும் எதிரஸ்திரப் பிரயோகஞ் செய்யடா பார்க்கின்றேன்.

மே:—நின்கணைகள் போயின; இந்த நூறு கணைகட்கென்ன சொல்லுகின்றனை!

ல:—துஷ்டா! நீ விடுத்த நூறுகணைகள் போயின. இதோபார், நின் சிரத்தை துணிக்கின்றேன். (அவன் சிரத்தைக்குறிபார்த்து ஒரு சரமெய்கின்றார்.)

மே:—(லாகவமாய் தன் சிரவில் அந்த சரம் விழவொட்டாமற் றடுத்து லக்ஷ்மணன் சிரஸை நோக்கி) பார், துஷ்டா! நின் சிரஸை வெட்டி வீழ்த்தும் இந்த மூன்றுபாணங்கள்

ல:—(அவைகளைத் தன்மேல் விழவொட்டாமற்றடுத்து கண்டித் தெறிந்து, பற்பல திவ்யகணைகளை தொடுத்து) அடா வீண்பெருமை எதற்கு, உன்னை யொன்றுந்தோன்றாமல் மதிமயக்கித் திண்டாடவடிக் கின்றேன். (விடுகின்றார்; அவன் திக்குமுக்கலாடித் தவிக்கின்றனன்; மனங்கலங்குகின்றனன்.)

மே: இதோ இந்த சக்தியை பிரயோகிக்கிறேன் பார். இந்த நாதிப்பயலைக்கொல்ல (என்று விபிஷணன்மேல் சக்தியை பிரயோகித்தல்)

(ஆகாயவீதியில் * பிருந்தமாய்த்தேவர்கள், ரிஷிகள், கந்தர்வர்கள் அப்ஸரஸுக்கள், எனையோர் நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். ** திரஸ்கரணி மந்தரபலத்தினால் அன்னவர்களை வேற்றுவர் காண முடியாது.)

தாளம்: ஆதி.

(சக்கப்பப்பம கமரி—நிரிமா கமகரிஸா
பஸ்ஸ காமகரிஸநி—ஸரிகம பாதநிஸா
பஸ்ஸ ஸஸ சநிதபகா—மத்த த்தநிதபமபா
பநி நீப நீபநி--பச்ச--பரீரீ
நீரி கரி கரி நிபநீ ரீநி--ரிநி ரிநி பகபா
தபஸாஸா--நிஸரிகஸா--சநிதப-நிதபம கரிகநி
என்ற நோட்டின் வர்ணமெட்டில் தர்க்கம்)

ல: பாவி நின்னை விடவோ
மே: வாயேனோ போடாபோ
ல: உன்றன்மீது இக்கணை
மே: வந்திடில் துணித்தெறிவேன்
ல: இன்றுன்னைக் கொல்வேனான்
மே: நன்று நாதன் மிகதுணிவே
ல: திருடா நீ செல்வாயோ

* பிருந்தம்—கும்பல்

** திரஸ்காரணி—பிறர் தன்னைக்காணாதபடி மறைத்துக்கொள்ளும் மந்தரம்

மே: இருடா நீ வெல்வாயோ

ல: அரக்கா நீயென் செய்வாய்

மே: பறங்க நின்னை யடிப்பேன்

ல: வதைப்பேனே இக்கணமே

மே: பதைக்காதே வாயேன் கணைதொடு.

ல: (விபீஷணருக்கு முன்நின்று கார்த்து) அடா வெட்கமில்லாதவனே! நின் சக்தி என்ன செய்யுமென்று நினைத்தனை; அதையும் நிர்வீர்யமாய்ப் பண்ணியாய்விட்டது. தருமந்தான் வெல்லுமடா; அதருமம் ஒருக்காலும் வெல்லாது! சத்தியம் தலைகாக்கும். அசத்தியம் தலையைப்போக்கும். அசத்தியவாதிகளே குடிகொண்டிருக்கும் இந்த இலங்கையையே ஒரே கணையினால் தூக்கி கடலில் வீழ்த்திவிடுவேனே! என்னென்றெண்ணி விட்டனை!

மே: [நின்று நிர்வகிக்க முடியாதவனாய்] ஆஹா, ஹா! வீண் பெருமை வேண்டாம். இதோ கௌபேராஸ்திரத்தை விடுகின்றேன் இதினின்று தப்பித்துக்கொள்ளடா பார்ப்போம்!

ல: இதோ பார்! துஷ்டா! ஐந்திராஸ்திரம் நின் கௌபேரத்தைப் போக்கியதே]

மே: [மனந்தளர்ந்தவனாய்] இதோபார், ஆக்னேயம்.

ல: இதோ வாருணாஸ்திரம் அதை யவித்து விட்டதே!

மே: [தனக்குள்] இனி என்னால் போர்புரிய முடியாது; தப்பிப் பிழைப்போமென்றாலும் வழியில்லை முன்போல் மாயையை பிரயோகிப்பதிலும் பயன் சிறிதுங் காணப்படவில்லை. நான் கற்ற வித்தையையெல்லாங் காட்டியாய்விட்டது. புறங்காட்டியோடுதல் பழிப்புக்கிடமாகும்; சுத்தவீரனாகிய எனக்கு அது தகுதியன்று; நரகந்தன் பந்தான் மிச்சமாகும் யுத்த முனையில் முன்னின்று உயிரிழந்தால் வீரசுவர்கமும், பராக்கிரமசாலி என்றபெயரும் கீர்த்தியும் இவ்வுலகமுள்ள நாளும் நிலையாய் நிற்கும் கண்மணி சுலோசனை வருந்துவாளே! என் செய்வேன்! ஏதோ இன்னும் கூடியமட்டில் பார்க்கிறேன். [பிரகாசமாய்] லக்ஷ்மணா! நீ வீண்கர்வங் கொள்ளவேண்டாம். இதோ பார் 'ஆஸுர'மென்றகணையைத் தொடுத்தெய்கிறேன்.

துறையூர் யா. சுப்பராமய்யர்.

---

## முத்தமிழ் க்ஷேத்திரம் பொது செய்திகள்.

1 ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் அஷ்டமி உற்சவம் வெகு விமரிசையாக யிருந்தது.

2 மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹால் லைப்ரெரியில் திரளான ஜனங்கள் தினம்தினம்வந்து வாசிக்கிறார்கள். ஆனால் தமிழ்பத்

திரிகை சுதேசமித்திரனைத்தவிர வேறொரு தமிழ்ப் பத்திரிகை கிடையாது. ஆங்கிலேய பத்திரிகைகள் பத்துக்குமேல் வருகிறது. தமிழ் நாடு க்ஷீணதிசைக்கு காரணம் இதுவே.

3 வருணபகவானுக்கு இன்னும் மனமிரங்கவில்லை, பனி வெகு மும்முரமா யடிக்கிறது.

4 மணிநகர வீதிக்கு சென்ற மாதொருத்தி மோட்டார் ஏறி மடிந்தனள். இதேமாதிரி கேஸுகள் தினம் நடந்துகொண்டிருக்கிறது.

5 ஸ்ரீ மீனும்பிகாலயத்தில் ஆரியர்கள் செய்யும் அக்கிரமம் எழுதிமுடியா. மேற்சட்டையுடனும் [வாக்கிங்ஸ்டிக்] ஊன்றுகோல் சகிதமும் மூலஸ்தானத்தில்சென்று கடவுளை தோத்திரம் செய்கிறார்கள். காலுக்கு செருப்பும் தலைக்கு தலைப்பாகைமட்டும் போட்டுக்கொண்டு போகவில்லை கூடியசீக்கிரம் போட்டுக்கொண்டு போனாலும் போவார்கள். வைதீகமே நீ மறைந்துவிட்டாயோ அம்பிகையே நீ இன்னும்பார்த்துக்கொண்டிருக்கலாமோ ரிஸீவர் சவ்னிப்பாரர்க.

6 சிசுக்கள் வியாதிகளினால் மடிகிறார்கள்.

7 மதுரையில் [டெலிபோன்] வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

8 மதுரை தேசிய மகாசபை தீவிரமாக பிரசாரம் செய்கிறார்கள். கதர் அபிவிருத்தி வெகு மும்முரம் பெல்காம் மகாநாட்டின் முடிவை ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## நீதிவிஜயம்

[385-ம் பக்கத்தொடர்ச்சி.]

II ஆறுவது சினம்.—ஆறுவது [உனக்குள்ளே] தணிய வேண்டியது, சினம்-கோபம். தணிக்கத் தகுந்தவைகளுள் முக்யமானது கோபமேயாகும். அது தணிய மற்ற குற்றங்களும் தானே விலகி விடும். கோபம்-பாபம் சண்டாளம்! கோபத்தினால் வருங்கேடுகள் பலவுள. அவற்றில் சிலவற்றை ஈண்டெடுத்து கூறுவோம்:--

“ கோபமே பாபங்களுக் கெல்லாம் தாய்தந்தை
கோபமே குடிகெடுக்கும்
கோபமே யொன்றையும் கூடிவர வொட்டாது
கோபமே துர்க்கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே புறவறக்கும்
கோபமே பழிசெய் கோபமே பகையாளி
கோபமே கருணைபோக்கும்

கோபமே யீனமாங் கோபமே யெவரையுக்
கூடாம லொருவனுக்கும்
கோபமே மற்விருன் கொண்டுபோய் தீயகர
கக்குழியினிற் றள்ளுமால்”

என்ற செய்யுளை சற்றுக்கவனித்தால் கோபமே சகலத்திற்கும்காரணமாகின்றது நன்கு விளங்கும். கோபத்தினுல் மனங்கலங்கி பாபபுண்ணிய பகுத்தறிவே இல்லாமல் போய்விடுகிறது. பிறகு மனஸ்தாபப்படுகிறது. ஆனல் யாருக்கும் கோபம் எழுவது ஸகஜம்தான். ஆனுலும் மனதைத் தன்வசப்படுத்தி கோபத்திற்கு ஆளாகாமல் ஜாக்ரதையாக முயலவேண்டும்.

ஒருவன் எவ்வள்வு சாஸ்திரம் முதலானவைகள் பயின்றிருந்தாலும், கோபம் உடையவனுயின் அக்கோபியை யாரும் மதியார்கள். நித்தியகுணத்தை முழுவதும் ஏககாலத்தில் அடக்குவது அசாத்தியமாயினும் தன் புத்தியினுல் கொஞ்சம்கொஞ்சமாய் அடக்கி வந்தால் முற்றிலும் தானே அடங்கிவிடும். அவ்வாறு அடக்காது வளரவிடுவோமானுல் அதனுல் பெருங்கேடுகள் ஏற்படும். யார் எவ்விதமான தீங்குசெய்யினும் அவைகளை முன்கோபமே இல்லாமல் பொறுக்கவேண்டும்.

“முன்கோபக்காரரோ டிணங்க வேண்டாம்” என்றும் நம்மமையார் கூறியுள்ளார். கோபம் என்பது எப்படிபட்டவர்க்கும் - காமக்ரோதாதிகளை விட்ட துறவிகளுக்கும் - ஒவ்வொரு காலத்தில் கோபம் உண்டாவது சகஜம். ஆனுலும் அவைகளைக் கருதாதுவிட முயலவேண்டும்

“ கோபத்தால் கௌசிகன் தவத்தைக் கொட்டினுன்
கோபத்தால் நகுஷனுங் கோலமாறினுன்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினுன்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே”

“ கோபமே பிறவியைக் கொடுக்கும் கொள்கையாம்
கோபமே யறிவினைக்கு றைக்கும் குட்டநோய்
கோபமே தாயையும் கொல்லும் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ”

நண்பர்காள் ! இவ்விரண்டு செய்யுட்களையும் உன்னிப்பாருங்கள். ஆஹா !! எப்பேர்ப்பட்ட மேலோர்களாலும் விடமுடியாத கோபத்தை எவ்வாறு அறவே விடுவது என்று சொல்லுவீர்களோ ! அப்படி ஒருகாலும் எண்ணுதீர்கள். எல்லாவற்றிற்கும் மனஸுதான் காரணம். மனமே உலகில் நடக்கும். எல்லா நன்மை தீமைகளுக்கும் காரணமாகி இருக்கின்றது. ‘மனதையடக்கினுல் யாவுமடங்கும்’ தன்னைக்காக்க விரும்புகின்றவன் கோபத்தைக் காக்க வேண்டும்!

[தொடரும்]

## தற்கால மாதர்கள்

தற்கால பெண்டுகள் தலையை வாரிக்கொள்ளுகிற விதமும் தலை மயிரை முடிபோட்டுகொள்ளுகிறவிதமும் சடைபோட்டுக் கொள்ளு கிறவிதமும் கணக்கில் அடங்காதவையாயிருக்கின்றது. மேல்நாட்டி லுள்ள ஸ்திரீகளுக்கு தலைமயிரை கட்டிக்கொள்ள நாடா அல்லது நூலைத்தவிர வேறுவாழைநார் அங்கே கிடைக்காது. ஆகலால்தான் அதனை உபயோகப்படுத்துகிறார்கள். நம் பெண்மணிகளும் மேல் நாட்டு ஸ்திக்களைப்போல் ஏன், நூல் அல்லது நாடா சடையில் கட் டிக் கொள்ளவேண்டும்? நம் நாட்டு வழக்கத்தை அனுசரிக்கக் கூடாதா?1 ரூபாய் இரண்டு ரூபாய் வீதம் விற்கும் தைலங்களை வாங்கி உபயோகிக்கிறார்கள். தைல வியாபாரிகள் தைலபுட்டிகளில் இருக்கும் பொம்மைகளில் தலை சிறியதாயும் தலைமயிர் வேண்டிய மட்டும் பெரியதாயும் சித்திரத்தில் வரைந்து விடுகிறார்கள். அதைப் பார்த்துக்கொண்டு நமது பெண்டுகள் நமக்கும் இதேமாதிரி மயிர் வளரும் என்று வாங்கி ஏமாந்து போகிறார்கள். சித்திரத்தில் வரை யும் மயிர் எவ்வளவு வேண்டுமானாலும் நீளமாக வரையலாமல்லவா? சாதாரணமாக தைலங்களுக்கு செலவழிக்கும் ரூபாய்களுக்கு மாதம் ஒரு முறை நல்ல எண்ணைஸ்நானம் செய்தால் ஒரு ரூபாய்க்கு மே லாகாது, இப்படிச்செய்வதால் நம்முடைய பணம் அயல் நாடும் செல்லாது நாமும் வைத்தியரைத் தேடவேண்டியதில்லை, தவிர தற் காலத்தில் பெண்மணிகள் ஆடைகளில் செலவழிக்கச்செய்யும் செல வோ ஜாஸ்தியாக இருக்கிறது. கேவலம் தாசிக்கு சமமாக உடை உடுத்திக்கொள்வதும் ரவிக்கையோ முழங்கைக்கு கீழே போட்டுக் கொள்வதும் அதுவும் மானத்தைக் காப்பதற்காக ஒன்றில்லாமல் பலவித கலர்களில் பலவிதமாக தைத்து போட்டுக்கொள்ளுகிறார்கள் சில மாதர்கள் ஊருக்கும் கோவிலுக்குப் போகும்பொழுதுதான் ஜாஸ்தி ஆடையாபரண அலங்கிருதமாய் விளங்குவது வழக்கமா யிருக்கிறது.

இதனால் கணவன்மார்களுக்கு அதிர்ப்தியும் அல்பசந்தேகமும் உண்டாகஹேதுவாகிறது. இவர்களது நடை உடைபாவனையானது தாசிதானோ அல்லது குடும்ப ஸ்திரீயோ என்று சந்தேகம் கொள்ள வேண்டியதாகிறது. ஸ்திரீகள் புருஷரைக்கண்டவுடன் மேல் புட வைகளை மூடிக்கொள்வதால் அடிக்கடி புருஷர்கள் ஸ்திரீயைநோக்க நேரிடுகிறது. ஸ்திரீகள் உடைகளை ஸரியாககவனித்து மூடிக்கொண் டிருந்தால் புருஷர்களுக்கும் அதிக கவனிப்பில்லாமல் போய்விடும் ஸ்திரீகள் வெளியில் போகும்போது [கற்புள்ள மங்கையைப்போல்] சாதாரண ஸ்திரீயைப்போல் அலங்காரம்செய்துகொண்டும் பூமி அதி ரும்படி நடக்காமல் பார்ப்பவர்கள் இழிவாக நினைக்க இடமில்லாமல் சாந்தமாக நடந்து போகவேண்டியது [இன்னும்வரும்]

R. சுப்பாச்சார், கட்டப்பள்ளி P. O. திருச்சி ஜில்லா

## சப்தரிஷி வெண்பா

1 காந்தி விரதங் கனபசியை யுண்டாக்கச்
சாந்தியடையாத் தடையாகி---வாந்தியுறும்
அன்னமென விட்டடையு மன்பாலடைவோரைப்
பின்ன மிலாப் பேரெனவே பேசு

2 பேசுவதா லென்னபலன் பேருளால் வையகத்தே
பேசுவது மின்றி யெளியோரை---ஏசுவென
நானின்று போற்றிடவே நற்பொருளை காட்டிடுங்கால்
தானின்று காக்குமென் றூணு

3 தாணுவென நின்னைத் தமியேன் றொழுதிடவே
காணும் பொருளவையுங் காட்டிடுவாய்---வேணுவினை
ஆவினம் உய்ந்திடவே அன்பாலே யூதுகின்ற
கோவிந்த மாலே குறி.

4 குறிப்பெழுத நேராக்குண மிலியைக் கொண்டே
அறிவுருவைக் காட்டி யடையும்—நெறியைச்
சரிவரச் செய்வாய் தரணி சுகிக்க
அரியரப் பேர்கோ ளழகா

5 அழகா யெழுத வறியா வறியேன்
பழகா விதத்தைப் பழகக்—குழகாகா
வென்றனை யேதுதிக்க வெஞ்ஞானச் சாமிநின்
மன்றுள வாய்மை வழங்கு.

6 வழங்கெனவே வேண்ட வருத்த மறவே
பழமுதவ நேர்ந்த பரம—பழனியுறை
ஆண்டவனே என்றும் அரிமருகா வென்றும்
பூண்டவன்பாற் போற்றினேன் போந்து

7 போந்த விந்தநாளைப் பொருத்தமுடனே கழிக்க
நேர்ந்த விந்தக்காலத்தை நேமித்த—காந்தியெனும்
நல்லறிஞர் அம்மையுடன் நற்குழவி யாகவெனைத்
தொல்லை வினைதீர்க்கத் தொடர்ந்து.

காலஞ்சென்ற A. சிவசூரியம் பிள்ளை,
தமிழ் பண்டிதர், ஆனைமலை,

நூதன புத்தக விளம்பரம்.

ஸ்ரீமத் ஆளவந்தார் ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளிய
திருவேங்கட நாதர் திரு உலா 0 4 0

ஸ்ரீ ஆண்டாள் திருவாய் மலர்ந்தருளிய
திருப்பாவை அந்தரார்த்த பாஷயம் 0 3 0

விலாசம்: மானேஜர், "இரஞ்சித போதினி" ஆபீஸ்,
12, அருணாசல முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

# இரஞ்சித போதினியின் இரக்தாக்ஷி வருஷத்திய
## திருக்கணித சர்வ முகூர்த்தப் பஞ்சாங்கம்

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847—பசலி 1333—ஹிஜரி 1342
கொல்லமாண்டு 1099-1100—இங்கிலீஷ் 1925ஹு

| தை | ஜனவரி பிப்ரவரி | வாரம். | திதி | நக்ஷத்திரம் | அமிர்தாதி யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | செ | திரி 20.35 | மக 56.13 | சித் 60 | மகரரவி நா 17.48 உத்தராயண புண்யகாலம் பொங்கல் பண்டிகை. கரிநாள் |
| 2 | 14 | புத | சது 24.13 | பூர 60 | அமி 60 | மாட்டுப்பொங்கல் கரிநாள் |
| 3 | 15 | வி | பஞ் 26.43 | உத் 3.23 | சி 0.28மர | கரிநாள் |
| 4 | 16 | வெ | சஷ் 27.38 | அஸ் 4.45 | சி 3.23 அ | சீமந்தம் உபநயனம். |
| 5 | 17 | சனி | சப் 26.53 | சித் 4.30 | மர 60 | திஷ்ரோஷ்டகா. |
| 6 | 18 | ஞாயி | அஷ்24.33 | சுவா2.40 | சித் 60 | திஷ்ரோஷ்டகா |
| 7 | 19 | திங் | நவ 20.25 | விசா59.15 | அ2.40 மர | அஷ்மாகம் |
| 8 | 20 | செ | தச 14.45 | அநு54.28 | சித் 54·28 | ஸ்மார்த்த ஏகாதசி |
| 9 | 21 | புத | ஏ 7.50<br>து 59.55 | கே 48.30 | சி 48.30 | சதிலா ஏகாதசி |
| 10 | 22 | வி | திர 51.30 | மூல41.58 | சித் 60 | பிரதோஷம், சீமந்தம் |
| 11 | 23 | வெ | சது42.40 | பூரா 34.58 | பி 34.58 | போதாயன அமாவாசை |
| 12 | 24 | சனி | ● அ33.58 | உத் 28.5 | சித் 60 | தை அமாவாசை |
| 13 | 25 | ஞாயி | பிர25.48 | திரு 21.43 | அ 21.43ம | சந்திர தரிசினம் |
| 14 | 26 | திங் | துதி 18.38 | அவி16.13 | சித் 60 | வித்தியாரம்பம் |
| 15 | 27 | செ | திரி 12.53 | சத 12.3 | மர 60 | மகாசதுர்த்தி விரதம் |
| 16 | 28 | புத | சது 8.43 | பூர 9.30 | அ9.30 சி | சுப முகூர்த்தங்கள் செய்யலா |
| 17 | 29 | வி | பஞ் 6.18 | உத் 8.48 | சித் 60 | கரிநாள், சஷ்டி உபவாசம் |
| 18 | 30 | வெ | சஷ் 5.45 | ரே 10.3 | அ 60 | விவாகம், கோடியுடுக்க |
| 19 | 31 | சனி | சப் 7.35 | அசு 13.3 | சித்60 | ரதசப்தமி, மகா சப்தமி |
| 20 | 1 | ஞாயி | அ 10.53 | பர 18.0 | சித்60 | மூலிகை உபயோகிக்க |
| 21 | 2 | திங் | நவ 15.53 | பர*24.18 | ம 46.55அ | கிருத்திகை |
| 22 | 3 | செ | தச 31.58 | ரோ31·28 | சித் 60 | யாத்திரை விலக்க |
| 23 | 4 | புத | ஏகா 28.25 | மிரு38.:43 | அ31.18 சி | சர்வ மத்வ ஏகாதசி |
| 24 | 5 | வி | து 35 | திரு 46.55 | ம 46.55அ | வராஹ துவாதசி |
| 25 | 6 | வெ | திர 41.20 | புன 54.8 | ம 46.55அ | பிரதோஷம், வராஹகல்பாதி |
| 26 | 7 | சனி | சது 46.58 | பூச 60 | சித் 60 | தைப்பூசம் |
| 27 | 8 | ஞாயி | ○ 51.43 | பூச 0.43 | சித் 60 | பௌர்ணமி |
| 28 | 9 | திங் | பிர 51.20 | ஆயி 6.30 | சி 6.30 ம | மாகபகுளம் |
| 29 | 10 | செ | துதி 57.58 | ஆயி11.10 | சித் 60 | யாத்திரை விலக்க |
| 30 | 11 | புத | திரி 59.15 | பூர 14.48 | அ 60 | சித்திரம் எழுத |

# ரஞ்சித போதினி ஆபீஸ்,

12, அருணாசல முதலி தெரு, சவுகார்பேட்டை. சென்னை

# புத்தக விளம்பரம்.

## மதிவதனம்.

உயர்தர தமிழ் நவீனம்.

இதுவரையில் எழுதப்பெற்ற பல தமிழ் நாவல்களில் இது முக்கியமானது. படிக்கப் படிக்க இன்பத்தையே அளிக்குமே யல்லாமல் குறைவுபடாது பல நண்பர்கள் வாங்கி வாசித்து இந்நாவலின் மகிமையைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். புஸ்தகம் 1-க்கு விலை அணா 12

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 8

## இராஜா கோபிசந்த்.

நல்ல எளிய தமிழ் நடையில் வெகு சிருங்காரமாக எழுதப்பட்டிருக்கிறது. கோபிசந்த் அரசன் மநுநீதி தவறாமல் அரசு செலுத்துவதும் ஜாலந்தர் ரிஷி பிராப்தமாகி நந்தவனத்தில் யோகநிஷ்டையிலிருப்பதும், கோபிசந்த் அரசன் ஷை மகானுக்குப் பலவிதமான இக்கட்டுகள் செய்து பழிபாவம் தன்தலைமேல் வருதலும் பிறகு ஷை ரிஷியினால் ஞானோபதேசம் பெற்று பலதேச சஞ்சாரம்செய்து தமக்கையார் வீற்றிருக்கும் தேசம் வருவதும் முஹமதியர்களின் பக்கீர் பண்டிகைக்கு ஆடு, கோழி பலியாவதைக்கண்டு காஜிக்கு நியாய முரைப்பதும் பிறகு தமக்கையார் கோபிசந்த் அரசனுக்கு விஷம் வைப்பதும், அரசன் ஓர் பாடலினால் அந்நகர முழுமையும் தீப்பட்டெரிவதும் பிறகு மைத்துனனால் கோபம் தணிந்து, மறுதேசம் சென்று ஓர் தனவந்தனால் குற்றவாளியாக்கப்பட்டு நீதி செலுத்திய அரசனும் தனவந்தனும் இறக்க ரிஷிகள் யாவரும் பிராப்தமாகி அரசனுக்கு ஞானோபதேசஞ்செய்து ராஜ்யபாரம் செய்யும்படி ஆக்ஞாபித்தல். இதன் விலை அணா 8

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 6

## அதிர்ஷ்ட சிந்தாமணி

உங்களின் ஜாதக பலாபலன்களையும் நீர் நினைத்த ஆருடத்தின் கேள்விகளையும் வெகு சீக்கிரத்தில் இப்புஸ்தகத்தில் தெரிந்துக் கொள்ளலாம். புஸ்தகம் 1-க்கு விலை அணா 6

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 4

## விநாயகர் கொத்து

விநாயகரின் அவதாரப் பெருமையும் இன்னும் சகல தெய்வங்களின் பிரபாவங்களையும் ஒருங்கே வரையப்பட்டு நல்ல கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 1-4-0

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூபா 1

## இராமர் அஸ்வமேத யாகம். (பெரிய எழுத்து)

ஸ்ரீராமசந்திரப் பிரபு பட்டாபிஷேகம் முடிந்து வண்ணனால் ஜானகியை வனமனுப்பி பிறகு ஸ்ரீராமச்சந்திரன் அஸ்வமேதயாகம் செய்து ஜானகியை அடையும் வரையில் வெகு விரிவாகவும் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ 2-8-0

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூ. 2

## பாக்கெட் சைசு பகவத்கீதை வசனம்.

கிருஷ்ண பரமாத்மா அருச்சுனனுக்கு விரிவாக உரைக்கப்பட்ட கீதை. இது வாசிக்க வாசிக்க வெகு ருசிகரமாகவும் சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுகவேண்டிய கிரமங்கள் யாவும் உரைக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 12

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 8

## தாயுமானவர் மூலம்

திருச்சினப்பள்ளியில் பரமகருணாநிதியாகி அவதரித்த தாயுமான சுவாமிகள் பாடிய பாடல்கள் அனைத்தும் இதில் அச்சிட்டு அழகிய கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ. 1-8-0

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூ. 1-2-0

## பெரிய புராண வசனம்
(படங்களுடன்)

63 நாயன்மார்கள் அவதரித்து முக்திபடைந்த ஸ்தலங்களும், அவரவர்களின் மஹிமையும் வசன ரூபமாக எழுதப்பட்டு உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு நல்ல அழகான கலிகோ பைண்டு செய்திருக்கிறது. இதன் விலை ரூ 1-8-0.

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூ. 1-2-0

## 18 சித்தர் ஞானக் கோர்வை

இதில் 18 சித்தர்களின் ஞானங்க ளெல்லாம் போதிக்கப்பட்டிருக்கிறது. வைத்தியர்களுக்கும் மஹான்களுக்கும் பயன்படக் கூடியது. இதன் விலை ரூபா 1-8-0

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூ. 1-2-0

## நந்தன் கீர்த்தனை (படத்துடன்)

இது ஐதீகப் படங்களுடன் நூதன வர்னமெட்டில் பிழையறப் பிரசுரிக்கப்பட்டது. இதன் விலை அணா 10

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 8

## 18 சித்தர் வைத்திய சில்லரைக் கோவை

அநேக விதமான வைத்திய விஷயங்கள், நாடி முறைகள் முதலிய யாவும் விளக்கமாகவும் இன்னின்ன வியாதிக்கு இன்ன ஔஷதம் உபயோகிக்க வேண்டுமென்றும் விவரமாக வரையப்பட்டு நல்ல கடிதத்தில் அச்சிட்டு அழகான கலிகோ பைண்டு செய்திருக்கிறது.

இதன் விலை ரூபா 2

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூபா 1-8-0

## மஸ்தான் சாஹிபு பாடல்

குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்கள் பாடிய பாடல்கள் அனைத்தையும் இதில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 1-8-0

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூ. 1-2-0

## வைத்திய சார சங்கிரகம்

இந்த வைத்திய சாஸ்திரம் அநேகவிமான மூலிகைகளுடன் ஒவ்வொரு வியாதிக்கும் இன்ன ஔஷதம் உபயோகிக்கவேண்டுமென்று விரிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறபடியால் ஒவ்வொரு குடும்பத்திலும் இப்புஸ்தகமிருந்தால் தாங்களே குடும்ப வைத்தியம் செய்துக்கொள்ளலாம். இதன் விலை ரூ. 2-4-0

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூ. 1-12-0

RANJITHA BODHINI OFFICE, Sowcarpet, MADRAS.

## விக்கிரமாதித்தன் கதை

(பெரிய எழுத்து புஸ்தகம் படங்களுடன்)

32 பதுமைகள் போஜராஜனுக்குச் சொன்ன கதைகள் யாவும் இதே மாதிரி (விக்கிரமாதித்தன் கதை) பெரிய எழுத்தில் அச்சிடப் பட்டது. புஸ்தகம் 1—க்கு விலை ரூ. 2

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை ரூ. 1-8-0

## திருவிளையாடல் வசனம்

சிவபெருமான் தாம் புரிந்த 64 திருவிளையாடல்களனைத்தையும் படத்துடன் வெகு விரிவாக வசன ரூபமாக வரையப்பட்டு ராயல் ஸைஸில் அழகான கலிகோ பைண்டு செய்திருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 2

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை ரூ. 1-8-0

## போகர் 7000

இதில் போகரிஷிபாடிய 7000 பாடல்களையும் ஒருங்கேசேர்த்து சுத்தமாக அச்சிட்டு உயர்ந்த கலிகோ பைண்டு செய்திருக்கிறது. ஒவ்வொரு வேதாந்திகளிடத்திலும், வைத்தியர்களிடத்திலும் இப் புஸ்தகம் அவசியம் இருக்கவேண்டியது. இதன் விலை ரூ 4

ரஞ்சிதபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை ரூ. 3

## சில்லரைக் கட்டடம் 200

இச் சில்லரைக் கட்டடம் பலதினுசுகளான 200 புஸ்தகங்கள் சேர்த்து ஒரே பைண்டாக செய்திருக்கிறது. விநாயக ஸ்தோத்திரம் முதல் சகல தேவர்களின் ஸ்தோத்திரங்களும் அடங்கியிருக்கிறது. ஜீவரத்தினம்போல் ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ள வேண்டியது

இதன் விலை ரூ. 2

ரஞ்சித போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை ரூ. 1-8-0

## "சத்தியகாமன் அல்லது புத்திரனிவனே"

இந்த நாவலைக் கையில் எடுத்தால் முடியுமுன் மனமானது வேறே சிந்தனையிற் செல்லாது என்றால் நாவலின் மகிமையைப்பற்றி நாம் எடுத்துக் கூறவேண்டியதில்லை. சொற்பகாபிகளே கையிருப்பு.

இதன் விலை அணா 12

ரஞ்சிதபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 10

ரஞ்சித போதினி ஆபீசு, சௌகார்பேட்டை, சென்னை

அருமையான நூல் இது போல் இதுவரை வெளிவரவில்லை.

எல்லாம் நூதனம். எல்லாம் இன்பம்.

படிக்கப் படிக்க இனிக்கும். நினைக்க நினைக்க மணக்கும்.

# மணவாழ்க்கையின் மர்மம்.



இதில் ஈசுர சிருஷ்டியின் அமைப்பான தேகத்தின் தத்துவ நிலையையும் தெய்வீக சம்மந்தமான மணவாழ்க்கையின் இலக்ஷணங்களையும் அதையனுசரிக்கும் முறையையும் மிகு தெளிவாய் விளக்கப்பட்டுள்ளது. இது பிரதி குடும்பத்திலும் இருக்கவேண்டியதான நூல்.

புத்தகம் 1-க்கு விலை அணா-8

ரஞ்சிதபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை அணா 6

---

## கர்ப்ப சாஸ்திரம்

இதுவரையில் வெளிவராத புஸ்தகம் இது ஒன்றுதான். இப்புஸ்தகம் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. குழந்தை கரு தரிப்பது முதல் தாய் வயிற்றிலிருந்து வெளிவரும் வரையில் வெகு தெளிவாகவும் ஆங்காங்கு ஐதீகப் படங்களுடன் வெகு விமரிசையாக காண்பிக்கப்பட்டிருக்கிறது உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகான முழு கலிகோ பைண்டு செய்திருக்கிறது.

இதன் விலை ரூ. 1-12-0

ரஞ்சிதபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை ரூ. 1-4-0

## வனஜலோசனி அல்லது வனிதையின் உபாயம்

இந்த நாவலை ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்கள் அவசியம் வாங்கி வாசிக்கவேண்டியது. இதில் ஸ்திரீகள் இல்லறத்தில் நடக்கவேண்டிய விதத்தை விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணா 6. ரஞ்சிதபோதினி சந்தாதாரர்களுக்கு அணா 4

**RANJITHA BODHINI OFFICE, Sowcarpet, MADRAS**

## முக்கிய கவனிப்பு

கீழ்க்கண்ட புத்தகங்கள் ரஞ்சித போதினியின் சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய் 1-க்கு அணு 4 கமிஷன் கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் புத்தகத்திற் கெழுதும்போது சந்தா நம்பரைக்குறித்து எழுதவேண்டும். சந்தா நெம்பர் குறிக்காவிட்டால் கமிஷன் கொடுக்கப்படமாட்டாது.

## டிராமா புத்தகங்கள்

| | விலை அணு | | விலை அணு |
|---|---|---|---|
| அல்லி அர்ச்சுன 1-வது பாகம் | 4 | பண்டரிநாதன் பஜனை கீர்த்தனை | 4 |
| ஷை 2-வது பாகம் | 4 | இராஜா கோபிசந்த் டிராமா | 8 |
| நல்லதங்காள் 1-வது பாகம் | 4 | ஞானசௌந்தரி | 4 |
| ஷை 2-வது பாகம் | 4 | சதாரம்—திருடன் பாட்டு | 4 |
| கோவிலன் 1 வது பாகம் | 4 | சாவித்திரி சத்தியவான் | 4 |
| ஷை 2-வது பாகம் | 4 | திருப்புகழ் 160-பாட்டு | 4 |
| அதிர்ஷ்ட சிந்தாமணி | 6 | மலையாள மாந்திரீகம் | 6 |


# புது விநோதம்

# எலக்டிரிக் சைகில் லாம்பு

சைகிலுக்கு உபயோகமாகக்கூடியது.

கம்பிளீட் பல்பு பாட்டரியுடன் விலை ரூ 5

# எலக்டிரிக் ஹாண்டு லாம்பு

பிரயாணிகளுக்டி கையில் பிடித்துக்கொண்டு போகலாம்.

40-கஜம் தூரம் வெளிச்சம் தெரியும்.

கம்பிளீட் பாட்டரி பல்தடன் விலை ரூ. 5

தனிபாட்டரி 1-க்கு விலை ரூ. 1

ஒரே தடவையில் 3-பாட்டரி வாங்கினல் ரூ. 2-8-0